
விலை ரூபா: 15.00

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு
Valampurii
சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 12 சனிக்கிழமை (25.04.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 127

## வந்தனர்; சந்தித்தனர்; திரும்பினர்

# உடனடிப் போர் நிறுத்தத்துக்கு இந்தியத் தூதுவர்கள் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இந்தியத் தூதுவர்கள் வலியுறுத்தியுள்ளனர். நேற்று இலங்கை வந்த இந்திய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், இந்திய வெளியுறவு செயலாளர் சிவ்சங்கர் மேனன் ஆகியோர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த பின் சில மணி நேரத்தில் இந்தியாவுக்கு திரும்பினர். *(12ஆம் பக்கம் பார்க்க)*



## இன்று கப்பல் சேவை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்குமான பயணிகள் கப்பல் சேவை இன்று சனிக்கிழமை இடம் பெறும் என அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில், பிரயாணத்திற்கான பதிவுகளை மேற்கொண்டு (6ஆவது கப்பலிற்கும் 7ஆவது கப்பலிற்கும்) அனுமதிச் சீட்டினை *(12 ஆம் பக்கம் பார்க்க)*

## 3 மாதங்களில் 6500 பொதுமக்கள் பலி; ஐ.நாவின் இரகசிய அறிக்கை அம்பலம்

(லண்டன்)

வன்னியில் இடம்பெற்றுவரும் போரில் சிக்கி மூன்று மாதங்களில் 6 ஆயிரத்து 500 பேர் உயிரிழந்துள்ளதாகவும் சுமார் 14 ஆயிரம் பேர் காயமடைந்ததாகவும் ஐ.நாவின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

இத் தகவல் அடங்கிய ஐ.நாவின் இரகசிய ஆவணம் ஒன்று வெளியில் கசிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னியில் இடம்பெறும் மோதல் சம்பவங்களால் ஏற்படும் மனிதாபிமான நெருக்கடிகள் குறித்து ஆராய ஐ.நா. செயலாளரின் விசேட பிரதிநிதி விஜய் நம்பியார் கடந்த வாரம் இலங்கைக்கு *(12 ஆம் பக்கம் பார்க்க)*

## வன்னியில் எறிகணைத் தாக்குதல் நேற்று 197 பொதுமக்கள் பலி

(வவுனியா)

புதுக்குடியிருப்பு பகுதி மீது நேற்று நடத்திய எறிகணைத் தாக்குதல்களில் 197 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுடன் நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களை முள்ளிவாய்க்கால் வைத்தியசாலைக்கு எடுத்து வர முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

வலைஞர்மடத்தில் தங்கியிருக்கும் மக்கள் வாழ்விடங்கள் மீது நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை *(12 ஆம் பக்கம் பார்க்க)*

## பாதுகாப்பு வலயப் பகுதிக்குச் செல்ல ஐ.நா. பணியாளர்களுக்கு அனுமதி!

(கொழும்பு)

கொழும்பில் பணிபுரியும் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் போர் இடம்பெறும் பாதுகாப்பு வலய பகுதிக்குச் செல்வதற்கு கொள்கையளவில் தாம் இணங்குவதாக அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது. பாதுகாப்பு வலய பகுதியில் பெருந்தொகையான அப்பாவி பொதுமக்கள் நாளாந்தம் படுகொலை செய்யப்படுவது தொடர்பாக கவலை வெளியிட்டுள்ள ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் இந்த பகுதிக்கு *(12ஆம் பக்கம் பார்க்க)*

## இடம்பெயர்ந்தோர் நலனைக் கவனிக்கும் பொறுப்பு மேஜர் ஜெனரல் சந்திரசிறியிடம்

(கொழும்பு)

இடம் பெயர்ந்தோரின் நலன்கள் தொடர்பான நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தலைமை அதிகாரியாக, இராணுவ உயர்மட்ட அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி அவசர காலச்சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது மேற்பார்வையின் கீழேயே இடம்பெயர்ந்தோர் தொடர்பான சகல நடவடிக்கைகளும் இனிமேல் மேற்கொள்ளப்படும். இடம்பெயர்ந்தோர் நலன் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இணைப்பாளராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சாள்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதவிர நிவாரணப் பணிகளை மேலும் இலகுபடுத்தும் நோக்கில் கண்டி, அநுராதபுரம் மற்றும் பொலநறுவை ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களும் இணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி மாவட்ட அரசாங்க அதிபர் கோத்தபய ஜெயரத்ன முகாம்கள் *(12 ஆம் பக்கம் பார்க்க)*



## வித்தியாதரன் விடுவிக்கப்பட்டார்

(கொழும்பு)

சுடர் ஒளி பத்திரிகையின் ஆசிரியர் வித்தியாதரன் நேற்று நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டார். இவர் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க போதிய ஆதாரங்கள் கிடையாது என்று கூறி இவரை விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

பெப்ரவரி மாதம் 26 ம் திகதி கொழும்பு கல்கிசை பகுதியில் மரணச் சடங்கு ஒன்றில் கலந்து கொண்டிருந்தபோது வெள்ளை வான் ஒன்றில் வந்தவர்களால் வித்தியாதரன் பலவந்தமாக *(12 ஆம் பக்கம் பார்க்க)*





சூரியன் அலைகளில் (யாழ்ப்பாணம் 93 Mhz)
சனிக்கிழமைகளில் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியினை நீங்கள் கேட்கலாம்

உங்கள் கதைகளை கேளுங்கள்

உள் நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான
மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களை தாங்கி வருகின்றது
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சி. இது உங்களுக்காக
உங்கள் கதைகளை சொல்லும் ஒரு நிகழ்ச்சி
தொடர்புகளுக்கு மீண்டும் வாழ்வோம் த.பெ.எண் 1039 கொழும்பு

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


புதுமாத்தளன் பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் படுகாயம் அடைந்தவர்கள்

# இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவ சர்வதேசத்தின் உதவிகள் தேவை

## அமைச்சர் றோகித அழைப்பு

(கொழும்பு)

இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ள சர்வதேச அமைப்புகளின் உதவிகளை தாம் எதிர்பார்த்துள்ளதாக வெளியுறவு அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வெளிநாட்டு அதிகாரிகள் சிலரைச் சந்தித்து அகதி முகாம்களின் நிலைமைகள் தொடர்பாக விளக்கமளித்த போதே அவர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் தொடர்பில் ஏராளமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்த அவர், ஓமந்தைச் சோதனைச் சாவடியில் இருந்து மக்களை முகாம்களுக்கு கொண்டு செல்வது முதல் அவர்களை தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வது என சர்வதேச சமூகத்தின் உதவி தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

குடிநீர், மலசலகூடங்கள், மருத்துவ உதவிகள் போன்ற தேவைகளுக்கு தாங்கள் தற்போது முன்னுரிமை வழங்கி வருவதாகத் தெரிவித்த அவர் இந்த விடயங்களில் உதவுவதற்கு தயாராக இருப்பதாக சர்வதேச சமூகத்தினர் உறுதியளித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ச-14)

## புல்மோட்டை வைத்தியசாலையிலிருந்து 225 நோயாளர்கள் மன்னாருக்கு மாற்றம்

(மன்னார்)

வன்னியில் இடம் பெறும் மோதல் காரணமாக காயமடைந்து புல்மோட்டை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒரு தொகுதி நோயாளர்கள் நேற்று முன்தினம் மாலை மன்னார் பொது வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

புல்மோட்டை வைத்தியசாலையில் இருந்து 20 அம்புலன்ஸ்கள் மற்றும் வாகனங்களில் 255 நோயாளர்கள் மன்னார் பொது வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

வன்னியில் இடம் பெற்று வரும் மோதல் காரணமாக இதுவரையில் மூவாயிரம் நோயாளர்கள் வரை மன்னார் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அழைத்து செல்லப்பட்டிருந்தனர்.

இவர்களில் நன்கு குணமடைந்த சுமார் 300 நோயாளர்கள் வரை வவுனியா நலன்புரி நிலையங்களுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டவர்களில் அநேகமானோர் சிறுவர்களும் பெண்களுமாவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## சி.சு.கவின் உபதலைவராக அமைச்சர் முரளிதரன்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர் பதவிக்கு அமைச்சர் முரளிதரன் (கருணா) நியமிக்கப்படவுள்ளார். இலங்கையின் மிகப் பலம்வாய்ந்த இரண்டு அரசியல் கட்சிகளில் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர் பதவிகளில் ஒன்று கருணாவிற்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அலரிமாளிகையில் ஜனாதிபதியின் தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நடை பெற்றது. (ச-5)

## சாவ.மகளிர் கல்லூரி ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் ஆசிரியர்கள் அனைவரையும் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுக் கொள்கின்றார். (ச)

## கனடாவில் தொடர்கிறது முற்றுகைப் போராட்டம்

கனடாவின் ரொறன்ரோவில் உள்ள அமெரிக்க துணைத் தூதரத்தின் முன்பாக தமிழ் இளையோர் அமைப்பினால் தொடர் போராட்டம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை பிற்பகல் தொடக்கம் நடைபெறுகின்றது. ஏராளமான மாணவர்களும் மக்களும் தொடர்ந்து இந்த போராட்டத்தில் கலந்து கொண்டு வருகின்றனர். ஏராளமான புலிக் கொடிகளையும் பிரபாகரனின் படங்களையும் தாங்கி வன்னியில் தற்போது நிகழும் இன அழிப்பின் கோரங்களை உலகின் கவனத்துக்கு கொண்டுவரும் பல்வேறு படங்கள், பதாகை களை தாங்கியபடி முழக்கங்களுடன் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ச-5)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### பட்டப்பின் படிப்புகள் பீடம்

**முதுகலைமாணி - சைவசித்தாந்தம்**
**முதுகலைமாணி - தமிழ்**
**கல்வியாண்டு 2009/2010 (அணி II)**

**புதிய அனுமதிகள்**

மேற்படி சுயகொடுப்பனவுக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதாவது ஒரு கற்கைநெறியிற் பட்டதாரியாக உள்ள எவரும் விண்ணப்பிக்கலாம். மேலும் பல்கலைக்கழக மூதவையால் ஏற்கப்படக் கூடிய வேறு தகுதிகளும் அனுபவமும் உடையவர்களின் விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படலாம்.

**கற்கைக் காலம்**

ஒரு வருடம்

சனி, ஞாயிறு கிழமைகளில் விரிவுரைகள் நடைபெறும்.

**மொழி மூலம்:** தமிழ்

**அனுமதி:**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நடாத்தும் நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

**விண்ணப்பப் படிவம் பெறும்முறை**

பட்டப்பின் படிப்புகள் பீட அலுவலகத்தில் பணம் கட்டும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கி, யாழ்.பல்கலைக்கழக கிளையில் ரூபா 100/= செலுத்திய பற்றுச்சீட்டை பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 100/= பெறுமதியான காசுக்கட்டளையுடன் 5/= பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட 23X10 செ.மீ. அளவுள்ள கடித உறையை உதவிப் பதிவாளர் பட்டப்பின் படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லதுநேரில் 22.05.2009 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

**பதிவாளர்.**
23.04.2009 (C-2418)


## ஆசிரிய கல்வியாளர்களுக்கு நியமன இடங்கள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவை தரம் IIIக்கு தெரிவானவர்களுக்கான அறிவித்தல் கடிதம் பொது சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நியமனக்கடிதங்களை ஏப்ரல் 20ஆம் திகதி பெற்றுக்கொள்ளுமாறு குறிப்பிட்ட கடிதங்கள் நேற்றே உரியவர்களுக்கு கிடைத்ததாக தெரிவிக்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக வெளியான பட்டியலின்படி இலங்கை ஆசிரியர் கல்வியாளர்சேவை தரம் IIIக்கு தெரிவானவர்களும் அவர்களுக்கு நியமனம் கிடைக்கப்பட்ட இடமும் வருமாறு;

**தொழிற் கல்வி**

கே.பாஸ்கரன் (யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி), எம்.ஈ.பி.மர்லதாஸன் (யாழ்ப்பாணம் தே.க.க), சி.நாகேந்திரன் (யாழ்ப்பாணம் தே.க.க), பி.தனபாலன் (யாழ்ப்பாணம் தே.க.க).

**ஆங்கிலம் (இரண்டாம் மொழி)**

சி.மொறின் (மட்டக்களப்பு தே.க.க, ரி.தனேந்திரன் (தர்காநகர் தே.க.க), எஸ்.பற்றிக் ஜெராட் (வவுனியா தே.க.க), ஏ.எம்.யெஸில் (அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி), சி.குலரதன் (வவுனியா தே.க.க), ஏ.ஜி.அஹமட் நளீர் அட்டவளைச்சேனை தே.க.க), எஸ்.முகுந்தன் (யாழ்ப்பாணம் தே.க.க), ரி.மோகன் (யாழ்ப்பாணம் தே.க.க), எம்.பிரபாகரன் (யாழ்ப்பாணம் தே.க.க), என்.ஏ.முஹமட் (ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரி), அப்துல் ஜெசீம் (மட்டக்களப்பு தே.க.க).

**நடனம்**

பி.வேல்நிதி (யாழ்ப்பாணம் தே.க.க), எஸ்.தயாபரன் (யாழ்ப்பாணம் தே.க.க).

**நாடகம்**

கே.திலகநாதன் (யாழ்ப்பாணம் தே.க.க), பி.இளங்கோ (மட்டக்களப்பு தே.க.க).

**விளையாட்டும் உடற் கல்வியும்**

டி.மோகனகுமார் (மட்டக்களப்பு தே.க.க), எம்.எம்.சுபைதா பர்ஷானா (தர்காநகர் தே.க.க).

**ஆரம்பக் கல்வி**

கே.உதயகுமார் (யாழ்ப்பாணம் தே.க்.க), எஸ்.லலீசன் (மட்டக்களப்பு தே.க.க), ஆர்.சத்தியா (பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி), எம்.எச்.எ.எவ்.ஆர்.ஸபி (தர்காநகர் தே.க.க), ஏ.ஜி.பவ்சுல் கனியா (அட்டாளைச்சேனை தே.க.க), என்.ஞானவேல் (யாழ்ப்பாணம் தே.க.க), ரி.இளங்குமரன் (வவுனியா தே.க.க), எம்.சி.பாத்திமா றிஸ்வியா (அட்டாளைச்சேனை தே.க.க), வி.கருணாலிங்கம் (கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி), எச்.சுபிதா (வவுனியா தே.க.க),

**ஆரம்பக் கல்வி (கணிதம்)**

கே.கிருஸ்ணயோகன் (யாழ்ப்பாணம் தே.க.க), பி.கமலசிங்கம் (வவுனியா தே.க.க), வி.முரளி (மட்டக்களப்பு தே.க.க).

**தகவல் தொழில் நுட்பம்**

எம்.வை.சுகுறியா பாத்திமா (தர்காநகர் தே.க.க), கே.சலினி (யாழ்ப்பாணம் தே.க.க), டி.ரி.நவநீத கிருஸ்ணன் (ஸ்ரீபாத தே.க.க), வி.நந்தகுமார் (றுவன்புர தே.க.க), எம்.நிரேஷ் குமார் (ஸ்ரீபாத தே.க.க), ஏ.உதயகுமார் (யாழ்ப்பாணம் தே.க.க), எஸ்.குகானந்தன் (வவுனியா தே.க.க), எம்.எச்.அன்வர் சதாத் (அட்டாளைச் சேனை தே.க.க), எம்.எச்.மின்வர் (அட்டாளைச்சேனை தே.க.க), பி.றிஸ்கான் (தர்காநகர் தே.க.

**சித்திரமும் கைப்பணியும்**

எ.முஹமட் நிவாஸ் (மட்டக்களப்பு தே.க.க).

**மனை விஞ்ஞானம்**

வி.ரவீந்திரராஜா (வவுனியா தே.க.க). (ச-3)


**ஒடியல் கூழ் விற்பனைக்கு**

வேல் மிக்ஸர் ஸ்தாபனத்தில் சனி, ஞாயிறு, புதன்கிழமைகளில் காலை 11 மணி தொடக்கம் மாலை வரை சுவையான ஒடியல் கூழ் உண்டு மகிழலாம்.

**இல. 57, கே.கே.எஸ்.ரோட்**
(கொக்குவில் சந்திக்கும் பூநாறி மரத்துக்கும் இடையில்) (2544)

# இன்று ஒரு தகவல்

## அபூர்வ சகோதரர்கள்

ஒரு ஊரில் இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். அதாவது அண்ணனும் தம்பியும். அதில் அண்ணனுக்கு மட்டும் திருமணமாகிவிட்டது.

இருவருக்கும் சொந்தமாக நிலம் இருந்தது. தனித்தனியாக விவசாயம் செய்து கொண்டிருந்தார்கள்.

அண்ணன் நினைத்தான்: எனக்கு மனைவி மக்கள் இருக்கிறார்கள். அதனால் கடைசிக்காலத்தில் நம்மைக் காப்பாற்றுவதற்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள்.

அதாவது முதுமையில் நமக்கு பாதுகாப்புண்டு. ஆனால் என் தம்பிக்கு யாருமே இல்லை. அவன் தனி ஆள். வயதானால் அவனைக் கவனிப்பதற்கு யாருமே இல்லை.

அதனால் அவன்தான் அதிகமாக பணம் சேர்க்க வேண்டும். அதற்கு நாம் தான் எப்படியாவது உதவி செய்ய வேண்டும் என்று அண்ணன் நினைத்தான். அதற்காக என்ன செய்யலாம் என்று யோசித்தான்.

ஒரு நாள் இரவு ஒரு சாக்கு நிறைய நெல்லைப் போட்டுக் கட்டி எடுத்துக்கொண்டு போனான். தம்பியின் வீட்டுக்குப் பின்பக்கம் இருந்த களஞ்சியத்தில் நெல்லைக் கொட்டிவிட்டு பேசாமல் வந்து விட்டான்.

தம்பியிடம் நேரடியாக கொடுத்தால் வாங்கிக் கொள்ள மாட்டான். அதனால் இப்படி இரகசியமாக போய் அவன் வீட்டுக் களஞ்சியத்தில் தானியத்தைக் கொட்டிவிட்டு திரும்பி வந்து விட்டான். இதேமாதிரி அடிக்கடி செய்து கொண்டிருந்தான். இதேநேரத்தில் தம்பி என்ன நினைத்தான் தெரியுமா?

நான் ஒருத்தன் தானே. ஆனால் அண்ணனின் குடும்பம் பெரிது அதனால் எனக்கு அதிகமாக எதுவும் தேவையில்லை. அண்ணனுக்குத்தான் அதிகம் தேவை. அவருக்கு நாம் ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று நினைத்தான்.

நேரில் கொடுத்தால் அவர் எதையும் வாங்கிக் கொள்ளமாட்டார் என்று தெரியும். அதனால் இவனும் இரவோடிரவாக ஒரு சாக்கு நிறைய தானியத்தைக் கட்டி எடுத்துக் கொண்டு போனான்.

அண்ணனின் களஞ்சியத்தில் கொட்டிவிட்டு திரும்பி வந்துவிட்டான். இதேபோல் இவனும் அடிக்கடி செய்து கொண்டிருந்தான்.

அதாவது அண்ணன் நல்லா இருக்கவேண்டும் என்று தம்பியும், தம்பி நல்லா இருக்க வேண்டும் என்று நினைத்து அண்ணனும் மாறிமாறி ஒருவருக்கொருவர் தெரியாமல் தானியத்தைக் கொட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் நள்ளிரவு அண்ணன் எழுந்து வழக்கம் போல் நெல்மூட்டையைத் தூக்கிக் கொண்டு தம்பி வீட்டுக்குப் போனான்.

அதேநேரம் தம்பியும் எழுந்து நெல்மூட்டையைத் தூக்கிக் கொண்டு அண்ணன் வீட்டுக்குப் போனான். இரண்டு தெருவும் சந்திக்கும் ஓரிடத்தில் இருவரும் மோதிக் கொண்டார்கள்.

அடடே தம்பி நீயா என்றான் அண்ணன். ஆமாண்ணே... நீங்களா என்றான் தம்பி. நெடுங்காலமாக இரகசியமாக நடந்து கொண்டிருந்தது என்னவென்று அப்பொழுது அந்த இடத்தில் தான் இருவருக்குமே புரிந்தது.

இது நடந்து நீண்ட காலத்துக்குப் பின்னர் அந்த ஊரில் கோயில் கட்டுவதற்கு ஒரு இடம் தேடினார்களாம். ஒரு புனிதமான இடம் தேவை. நம்ம ஊரில் அப்படிப்பட்ட இடம் எது என்று எல்லோரும் ஒருமனதாக முடிவு செய்த இடம் எது தெரியுமா?

அந்த அண்ணனும் தம்பியும் நள்ளிரவில் சந்தித்துக் கொண்ட அந்த இடம் தான் புனிதமான இடம் என்று முடிவு செய்தார்களாம் அந்த இடத்தில் தான் கோயிலையும் கட்டினார்களாம்.

கடவுளை வணங்குபவர் - வணங்காதவர் என்ற அடிப்படையில் சமயத்தைக் கண்டறிவதில்லை. அன்பு செலுத்துபவர் - செலுத்தாதவர் என்ற இருவகையினரால் தான் சமயம் கண்டறியப்படுகிறது என்பது பெரியவர்கள் கருத்து.

இந்தக் காலத்திலெல்லாம் சகோதரபாசம் இப்படியா இருக்கிறது!

ஒருத்தன் சொன்னான்: எங்கள் வீட்டில் பங்கு பிரித்த போது எனக்கு எதுவுமே வேண்டாம். எல்லாவற்றையும் அண்ணனிடம் கொடுத்துவிடுங்கள் என்று சொல்லி விட்டேன் என்றான் பெருந்தன்மையாக.

"பரவாயில்லையே, உங்கள் அப்பா விட்டுட்டுப் போனது எவ்வளவு இருக்கும்? என்றேன்.

" அது சுமாராக ஒரு 50 ஆயிரம் இருக்கும்!" என்றான்.

"என்ன சொத்தா?" என்று கேட்டேன்.

"இல்லை. கடன்" என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிராம அலுவலர்களை தரம் II இலிருந்து தரம் I இற்கு பதவியுயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கிராம அலுவலர்களை மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் தரம் II இலிருந்து தரம் I இற்கு பதவியுயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சைக்கு 24 கிராம அலுவலர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளதாகவும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட அனைவரையும் தவறாது தோற்றுமாறும் யாழ். மாவட்ட அரச அதிபர் க. கணேஷ் கேட்டுக் கொள்கின்றார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம் பிரதேச செயலகம், உதவி அரசாங்க அதிபர் அலுவலக ரீதியாக வருமாறு,

**வேலணை**

கே. பரமேஸ்வரன், எஸ். இரத்தினேஸ்வரன், என். தனபாலசிங்கம், ஆர். யோகேஸ்வரன்.

**காரை நகர்**

ஆர். திருப்புகலூர்சிங்கம்.

**யாழ்ப்பாணம்**

எஸ். ஞானசேகரம், கே. செல்வன்குமார், கே. விஜயரட்ணம்.

**நல்லூர்**

திருமதி. ஆர். இராகினி, எஸ். சிறிஸ்கந்தராஜா.

**சண்டிலிப்பாய்**

எல். அருள்ராஜ், எஸ். அருள்ஞானந்தன், திருமதி. கே. லிலிதாம்பாள்.

**சங்கானை**

எஸ். ஜீவராஜா, பொ. ஜெயகரன்.

**உடுவில்**

பி. பாலபத்மன், என். தவயோகராஜன்.

**தெல்லிப்பளை**

ஆர் இத்திரஜித், என். இரவீந்திரன்.

**தென்மராட்சி**

கே. சுபாஸ் சந்திரபோஸ், கே. பரமானந்தன், எஸ்.டி. தேவகுமார்.

**பருத்தித்துறை**

பி. குமரேசன்.

**மருதங்கேணி**

எஸ். தோமஸ். யூட்.

யாழ். மாவட்ட கிராம அலுவலர்களை மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் தரம் II இலிருந்து தரம் I இற்கு பதவியுயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளதனால் அழைக்கப்பட்ட அனைவரும் தவறாது தோற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஓ)

# தொழில் நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

மொறட்டுவைப் பல்கலைக் கழகத்தின் தொழில் நுட்பவியல் நிறுவனத்தினால் நடத்தப்படும் மூன்று வருடகால முழுநேர தொழில் நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள், க.பொ.த. உயர்தர பரீட்சையில் இணைந்த கணிதம், உயர்கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், ஆகிய பாடங்களில் மூன்றிற்கு குறையாமல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பிரதிப் பதிவாளர், தொழில் நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவ பல்கலைக்கழகம், கட்டுபெத்தை, மொறட்டுவ என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை 2009/4/17 வர்த்தமானியிலோ அன்றி வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிடலாம். (ஓ-6)

# பொது மக்களுக்கான கலந்துரையாடல்

நல்லூர் பிரதேச சபையின் செயற்பாடுகள், சேவை பெறுநர் பட்டயம் மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான கலந்துரையாடலொன்று எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நல்லூர் பிரதேச சபை செயலாளர் மேரி ஜோசப் சாந்தசீலன் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-30)




வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கோப்பாய் பிரதேச புற்று நோயாளர்களுக்கான அன்பளிப்பு வழங்கும் நிகழ்வு அண்மையில் கோப்பாய் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் புற்றுநோய் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ந. ஜெயக்குமார் உரையாற்றுவதையும், கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் செல்வி ச. பிறேமினி, கோப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், வட பிரதேச நல்லொழுக்க சம்மேளன செயலாளர் செ. குமாரசிங்கம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

*25.04.2009*
*(சித்திரை 12, சனிக்கிழமை)*
*அமாவாசை முற்பகல் 9.35 மணிவரை*
*அச்சுவினி பிற்பகல் 1.23 மணிவரை*
*இராகுகாலம் 9.00-10.30 மணிவரை*
*சுபநேரம் 3.00-4.30 மணிவரை*
*சித்திரைப் பரணி*

| | |
|---|---|
| மேடம் | வெகுமானம், சயனசுகம், கற்பனை மிகுதி, கௌரவமான நிலை. |
| இடபம் | சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், தனவிரயம், காரிய அலைச்சல். |
| மிதுனம் | குடும்ப சுகம், தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, போசன சுகம். |
| கடகம் | ஆரோக்கியம், எடுத்த காரியம் கைகூடும், நன்கொடை, புதிய திருப்பம். |
| சிங்கம் | உத்தியோக பங்கம், அஜீரணக் கோளாறு, கட்டுப்பாடு, தேவையற்ற பயம். |
| கன்னி | முழங்கால் வலி, காரிய தடங்கல், மரியாதைக் குறைவு, போசன சுகம். |
| துலாம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, களஸ்திர நன்மை, காரிய அனுகூலம், தனலாபம். |
| விருச்சிகம் | சுவாரஸ்யம், செய்தொழில் விருத்தி, உடல் நலம், காரிய நன்மை. |
| தனுசு | தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, பணக்குறைவு, வாக்கு மேன்மை. |
| மகரம் | ரோகபயம், தனவிரயம், கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம். |
| கும்பம் | நற்கீர்த்தி, கூட்டு முயற்சி, மனோதைரியம், பொருள் சேர்க்கை. |
| மீனம் | போசன சுகக்குறைவு, விவாதம், முயற்சி தாமதம், அதிக செலவு. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 150 | 140 |
| பச்சைமிளகாய் | 40 | 50 |
| தக்காளி | 130 | 140 |
| அவரை | - | - |
| மரவள்ளிக்கிழங்கு | - | 70 |
| கோவா | 10 | 20 |
| கரட் | 30 | 40 |
| பூசணி | 15 | 30 |
| புடோல் | 40 | 50 |
| வாழைக்காய் | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 30 | 35 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 |
| பாகற்காய் | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 |
| கரணைக் கிழங்கு | 40 | 40 |
| பயிற்றங்காய் | 40 | 40 |
| லீக்ஸ்- | 180 | 200 |
| போஞ்சி | - | - |
| கீரை - 1 பிடி | 20 | 25 |
| தேசிக்காய் | 80 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40 |

## இசைநாடக நூல் வெளியீடு

(பாசையூர்)

பாசையூர் புனித அந்தோனியார் சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் மதுர கவிப்புலவர் நீ. மிக்கோர்சிங்கத்தினால் எழுதி 1965 ஆம் ஆண்டில் மேடையேற்றப்பட்ட "பரமபிதாவின் 10 கட்டளைகள்" என்னும் இசை நாடகம் நூல் வடிவில் தயாரித்து வெளியிடப் படவுள்ளது.

இவ் வெளியீட்டு நிகழ்வு இன்று சனிக் கிழமை மாலை 3.30 மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வெளியீட்டுரையை பாசையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை அருட்திரு ஞா.பிலேந்திரன் அடிகளாரும் நூல் ஆய்வுரையை திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ. யோண்சன்ராஜ்குமாரும் வழங்கவுள்ளனர். (ஓ-4-39)

## தவறுதலாக கிணற்றில் விழுந்த சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

வயல் கிணற்றில் தவறுதலாக வீழ்ந்த சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

சித்தன் கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் தரம் 2 இல் கல்வி பயிலும் நாகராஜா அபிமன்யு (வயது7) என்ற சிறுவன் நேற்று முன்தினம் வயலில் விளையாடிக் கொண்டிருந்த போது தவறுதலாக கிணற்றில் வீழ்ந்துள்ளான்.

எனினும் நேற்றுக் காலையே இவரின் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-30)

# க.பொ.த சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள்

உடுவில் மகளிர் கல்லூரி

தமிழ்மொழி

த.பாமினி-6A2BS , ர.பாதிஷா-5A2BC, க.கலைச்செல்வி-5A2B2C, ர.ஜனனி-5A2B2C, ச.ஏஞ்சல்நிவேதிகா-4A3C2S, க.கலீசியா-4ABC2S, கை. சுதர்சினி-4A4BC, ந.பிரவீணா-3AB3CS, சி.கிருஷிகா-3AB3C2S, ம.அக்ஷாள்-3A3B3C க.டினோயா-3A2B3CS, ச.சயந்தினி-3AB2C2S, வி.சுஜீவினி-3AB2C3S, ச.சோபனா-3A3B3C, ச.சுகன்யா-3A2B2CS, சி.தமிழினி-3AB4CS, ஜெ.வினோஜினி-2AB4CS, சோ. அருந்ததி-2A2B3C2S, ப.டிலானி-2A2B3CS, தி.கேதாரணி-2A3B3CS, பா.மிதுலா-2A5CS ,கு.நிரஞ்சனா-2AB2C3S, ம.யாழினி-2AB3C2S

ஆங்கிலமொழி

எஸ்.இந்துகா-7A2B, எல்.டவ்ணியா-6A3C, ஆர்.தபித்தா கிறிஸ்ரின்-5A3BS , ப.நர்த்தனா-5A2BCS, எ.மேரிதர்சிகா-5A2BCS, ஜெ.சுகன்யா-5AB2CS, கே.பிரியங்கா-4A2B2CS, ஜெ. பெனிக் றொஸ்னா-4AB3CS, ப.பானுஜா-3A4B2C, ஆர்.சத்தியா-3A2B2CS, எஸ்.அனிற்றா-2A2BC3S, பி.ஜெகனா-2AB5CS, வி.ஏஞ்சல் சஞ்சிகா-2AB4C2S, ஆர்.பிரசண்யா-A4B3CS. ஓ

யாழ்.செய்திகள்

## சைவசமய அறிவுப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

திருவண்ணைபுரம் வண்ணைஸ்ரீ அரசடி விநாயகர் ஆலய உற்சவத்தை முன்னிட்டு வருடாந்தம் நடாத்தப்படும் சைவசமய அறிவுப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களால் குறிக்கப்பட்ட 26 ஆம் திகதியிலிருந்து ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி பரீட்சை பற்றிய மேலதிக விபரங்கள் எதிர்வரும் மேமாதம் 10 ஆம்திகதி பத்திரிகையில் அறியத்தரப்படும் என்றும் நிர்வாகசபையினர் அறிவித்துள்ளனர். (ஓ-4)

## லயன்ஸ் கழக மாநாடு

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் நிதியம் தொடர்பான மாநாடு இன்று பிற்பகல் 3 மணிக்கு நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் லயன்ஸ் கழக 306 B1 இன் மாவட்ட இணைப்பாளர் லயன் க.மு.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-4)






வலிகாமம் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினால் அண்மையில் சாந்தை கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடத்தப்பட்ட பெற்றோர் பிள்ளைகளுக்கான கல்வி விழிப்புணர்வுச் செயலமர்வில் செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா உரையாற்றுவதையும், எழுத்தறிவூட்டல் ஆசிரியர் த.மகாதேவன், வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி பி.சத்தியவதனி, கிராம அலுவலர் என். சோமஸ்கந்தமூர்த்தி, சமுர்த்தி அலுவலர் ரி. பாலமுரளி ஆகியோர் அமர்ந்திருப்பதையும், செயலமர்வுக்கு வருகை தந்த பெற்றோர் மற்றும் பிள்ளைகளையும் படங்களில் காணலாம்.

## இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்தும்

BOC இலங்கை வங்கி

க.பொ.த. உயர்தர (2008) "3A", "2AB"

சித்தி பெற்ற யாழ் வலய மாணவர்களுக்கான கௌரவிப்பு

| | | |
|---|---|---|
| இடம் | : | யாழ்.செயலக மாநாட்டு மண்டபம் |
| காலம் | : | 26.04.2009 |
| நேரம் | : | காலை 8.30 மணி |
| தலைமை | : | திரு ந.சிவரட்ணம் (உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி-வட பிராந்தியம்) |
| வரவேற்புரை | : | திரு.இ.ஜயேந்திரா (செயற்பாட்டு முகாமையாளர்) |
| ஆசியுரை | : | திரு.கே. கணேஷ் (அரசாங்கஅதிபர் -யாழ்ப்பாணம்) |
| சிறப்புரை | : | பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர் யாழ்.பல்கலைக்கழகம்) |
| கருத்துரை | : | திரு வி.ரி.செல்வரட்ணம் (மேலதிக பிராந்திய கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வித் திணைக்களம்) |
| | | திருமதி அ.வேதநாயகம் (யாழ். கல்விப்பணிப்பாளர்) |
| | | திரு.சி.வெற்றிவேலாயுதம் (நிர்வாக இயக்குநர் -வலம்புரி) |
| | | திரு.என்.விஜயசுந்தரம் (பிரதம ஆசிரியர் -வலம்புரி) |
| | | திரு.கே. பாலசுப்பிரமணியம் (முன்னாள் உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி யாழ்ப்பாணம்) |
| விரிவுரை நிகழ்ச்சி | : | "Career Development" திரு.எம்.சின்னத்தம்பி (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) |
| | | சான்றிதழ் மற்றும் அடையாளப் பரிசு வழங்கல் |
| நன்றியுரை | | |

கௌரவிக்கப்படும் மாணவர்கள் தமது பாடசாலை அதிபர்களுடன் சீருடையில் சமுகம் தருவது சிறப்பானது.

## அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

எனவே சகல பாடசாலை அதிபர்களையும் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் தெரிவித்துள்ளார். (ஓ-4-29)

## மிருதங்க அரங்கேற்றம்

திருமறைக் கலாமன்றக் கலைஞனும் யாழ். பல்கலைக்கழக இசைத்துறை மிருதங்க விரிவுரையாளரான லயஞான வாரிதி சி. மகேந்திரன் அவர்களின் மாணவனுமான இரத்தினசிங்கம் ஜெயகாந்தனின் மிருதங்க அரங்கேற்றம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம் பெறவுள்ளது.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளாரின் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந் தரம்பிள்ளையும் அவரது பாரியார் திருமதி இராசலட்சுமி பால்சுந்தரம்பிள்ளையும் கலந்துகொள்வார்கள். கௌரவ விருந்தினராக யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், யாழ் பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா.வி.மு. நவரத்தினம், தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், யாழ். பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். ஓ

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் தரம் 10,11இல் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-7)

## ஆங்கில பாசறை

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஏற்கனவே தீர்மானித்தபடி தரம் 10, 11 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான ஆங்கில பாசறை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கல்லூரி அதிபர் வி.பேரின்பநாதன் அறிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் 28,29,30 ஆம் திகதிகளில் வலய மட்ட மெய்வன்மைப் போட்டிகள் நடைபெறவுள்ளதால் அதில் பங்குபற்றும் மாணவர்கள் அனைவரையும் நாளை மறுநாள் திங்கட்கிழமை தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றார். (ஓ-4)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருவருள்மிகு கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 நாட்கள் நடை பெறவுள்ளது.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு சப்பறமும், 07 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 8.30 மணிக்கு இரதோற்சவமும், 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (ஓ-4)

# இலங்கையில் தமிழர் 129

### பிற கதைகள்

மேலே கூறப்பட்ட கதைகளை விட மேலும் பல சமஸ்கிருத மயமாக்கக் கதைகள் இந்திய நூல்களில் உள்ளன. இராமாயணத்தின் நாயகனான இராமருடைய மகன் குசன் நாக கன்னிகையாகிய குமுதவதியை மணம் புரிந்த கதை ஒன்று ரகுவம்சத்தில் கூறப்பட்டுள்ளது. யாதவ குலத்தை நிறுவிய யது, நாக மன்னன் துமவர்ணனின் புதல்வியர் ஐவரை மணம் முடித்து அவர்கள் மூலம் ஏழு குலங்களைத் தோற்றுவித்த கதை ஹரிவம்ச நூலில் உள்ளது.

பிற்சேர்க்கை – 2

### ஆனைக்கோட்டை முத்திரை

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆனைக் கோட்டையில் 1980 டிசெம்பர் மாதத்தில் இந்நூலாசிரியரின் தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து வரலாற்றுத் துறையைச் சேர்ந்த ஒரு குழு அகழ்வாய்வு நடத்தியபோது ஆதி இரும்புக்காலச் சவ அடக்கம் ஒன்று வெளிப்படுத்தப்பட்டது. அதில் காணப்பட்ட ஓர் எலும்புக் கூட்டுடன் கை விரலில் அணியும் மோதிரம் ஒன்று ஸ்லேட் டைட் எனப்படும் கல்லில் பொறிக்கப்பட்ட பெயருடன் கிடைத்தது. இத்தகைய ஆதி இரும்புக் காலச் சவ அடக்கங்களில் தென்னிந்தியாவிலோ இலங்கையிலோ இதற்கு முன் இப்படிப் பெயர் பொறித்த பொருள் எதுவும் கிடைக்கவில்லை.

இம் மோதிரம் ஒரு முத்திரையாகப் பயன்படுத்தப்பட்டது. இம்முத்திரையில் இரண்டு வரிகளில் எழுத்துக்கள் உள்ளன. முதல் வரியில் மூன்று குறி எழுத்துக்களும் இரண்டாவது வரியில் மூன்று பிராமி எழுத்துக்களும் உள்ளன.

பிராமி எழுத்துக்களை "கோவேத" எனப் படிக்கலாம். இச்சொற்றொடர் பிராகிருத மொழியைச் சேர்ந்தது அன்று. இதனைக் கோ+ வேத எனப் பிரிக்கலாம். இது சமகாலத்துத் தமிழ்நாட்டுத் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் சொற்றொடர்களாகிய கோ ஆதன், கோபூதி விர ஆகிய சொற்றொடர்களுடன் ஒப்பிடத்தக்கது. இதில் வரும் 'கோ' மன்னனைக் குறிக்கும் ஆதித் தமிழ்/திராவிடச் சொல்லாகும். முத்திரைகளிலும் நாணயங்களிலும் வரும் பெயர்கள் பொதுவாக ஆறாம் வேற்றுமை உருபுடன் (அதாவது 'உடைய' என்ற பொருள்படும் சொல் இறுதியுடன்) காணப்படும். தமிழில் மட்டுமின்றிப் பிராகிருதம் மற்றும் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் பெயர் பொறிக்கப்பட்ட நாணயங்களிலும் முத்திரைகளிலும் இவ்வாறே ஆறாம் வேற்றுமை உருபுடன் பெயர் காணப்படும். எடுத்துக்காட்டாக, கந்தரோடையில் கிடைத்த சிவப்புக் கார்னீலியன் முத்திரையில் உள்ள பெயர் சமஸ்கிருதத்தில் விஷ்ணு பூதிஸ்ய எனக் காணப்படுகிறது.

இதன் பொருள் "விஷ்ணுபூதி உடைய' என்பதாகும். ஆந்திரப் பிரதேசத்தில் கிடைத்த ஸாதவாஹன மன்னர்களுடைய நாணயங்களில் ஸிரி ஸாதகணிஸ மற்றும் ஸிரி புலுமாவிஸ ஆகிய பெயர்கள் காணப்படுகின்றன. இவை முறையே 'ஸிரி ஸாதகணி உடைய', 'ஸிரி புலுமாவி உடைய எனப்பொருள்படும். இதேபோன்று ஆனைக்கோட்டை முத்திரையிலும் பெயர் ஒன்று ஆறாம் வேற்றுமை உருபுடன் காணப்படுகின்றது. அந்த உருபு பழந்தமிழில் காணப்படும் 'அ' உருபு ஆகும்.

பழந்தமிழில் மட்டுமின்றித் தென் திராவிட மொழிகளாகிய இருளர் மொழி, வடகர் மொழி மற்றும் துளு மொழி ஆகியவற்றிலும் இந்த உருபு உள்ளது. பழந்தமிழர் பிராமிக் கல்வெட்டுக்களிலும் இதனைக் காணலாம். சங்கத் தமிழ்ச் செய்யுள்களில் இதற்கு எடுத்துக்காட்டாக, குறுந்தொகையில் வரும் சொற்றொடராகிய 'மரத்த கோடு' என்பதைக் குறிப்பீடலாம். இது 'மரத்தினுடைய கோடு' என்று பொருள்படும்.

இப்படிப் பார்க்குமிடத்து, ஆனைக் கோட்டை முத்திரையில் உள்ள பிராமி எழுத்து வாசகத்தைப் பின்வருமாறு பிரித்துப் படிக்கலாம். கோ+வேது+அ= கோவேது உடைய. வேது என்ற பெயருடன் தொடர்புடையதாக முதலாம் வரியில் உள்ள குறி எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன என்று தோன்றுகிறது. இக் குறி எழுத்துக்கள் பிராமி எழுத்துப் பயன்படத் தொடங்குமுன் இருந்து சில தேவைகளுக்காக எழுதப்பட்ட எழுத்துக்கள்.

1. இங்கு கூறப்பட்ட விஷயங்களை விரிவாக அறிவதற்குப் பின்வருவனவற்றைப் பார்க்கவும்.

Indrapala 1981; Mahadevan 2003: 434, 435,552; Krishnamurti: 2003:233-234; Nagaswamy 1981:131,141

பிற்சேர்க்கை –3

### கந்தரோடை முத்திரை

யாழ்ப்பாண மாவட்டத்தின் முக்கிய தொல்லியல் தலங்களுள் சிறப்பிடம் பெறும் கந்தரோடையில் பலவகைப்பட்ட ஆதிகாலத்து எழுத்துப் பொறித்த பொருள்கள் காலத்துக்குக் காலம் வெளிப்பட்டாலும் அவை அனைத்தும் ஆய்வாளர் கவனத்துக்குக் கொண்டு வரப்படுவதில்லை.

இதனால் மிகவும் பய னுள்ள தொல்லியல் பொருட்கள் அங்கு கிடைத்தும் அவை கவனமாகப் பேணப்படவில்லை. இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஓர் அரிய கார்ணீலியன் முத்திரை ஒன்று கண்டறியப்பட்டு 1958 இல் ஆய்வாளர் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆனால் அதைப் பற்றிய செய்தி இலகுவில் கிடைக்கக் கூடியதாக வெளியிடப்படவில்லை. இந் நூலாசிரியர் பல்கலைக்கழக மாணவராக இருந்தபோது யாழ்ப்பாணச் சாசனங்கள் பற்றி எழுதிய ஒரு கட்டுரையில் மட்டுமே இதுபற்றிய செய்தி உள்ளது. அது 1959இல் பேராதனையில் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட இளங்கதிர் என்னும் சஞ்சிகையில் வெளிவந்தது. அதில் கந்தரோடை முத்திரை பற்றி எழுதப்பட்ட பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கால ஒழுங்கின்படி அடுத்ததாக உள்ளது. அண்மையிற் கிடைத்த கந்தரோடை முத்திரை (Seal) ஆகும் இதுபற்றிய தகவல் எதுவும் இதுவரை ஓரிடத்திலுங் குறிப்பிடப் படாததால் அத்தகவலை ஈண்டு தருவது பொருத்தமெனக் கருதுகின்றேன். யாழ்ப்பாணத்திலுள்ள தொல்பொருட் தலங்களுள் (archaeological sites) மிக முக்கியமானது கந்தரோடையாகும்.

கந்தரோடையிற் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட ஒரு சிறு முத்திரை சென்ற ஆண்டு

பேராசிரியர்
கா. இந்திரபாலா


ஐப்பசி மாதத்தில் எங்கள் பல்கலைக்கழகத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அதிலுள்ள சிறு எழுத்துக்களை எங்கள் தொல்பொருளியற் கலாநிதி பரணவிதான அவர்களின் உதவியால் வாசிப்பதற்கே அது கொண்டு வரப் பட்டது.

அதன் சொந்தக்காரர் எனக்கூறப்பட்டவர், யாழ்ப்பாணக் கல்லூரி வரலாற்று விரிவுரையாளர் கலாநிதி டபிள்யூ.ஆர். ஹோம்ஸ் (Dr.W.R.Holmes) என்னும் அமெரிக்கரின் மகனாவார். இச் சிறுவர் கந்தரோடையி லிருக்கும் ஒரு சிறுவனிடமிருந்து இம் முத்திரையைப் பெற்றதாகக் கூறினாராம். அதிலுள்ள எழுத்துக்களை எளிதாக வாசித்த பேராசிரியர் அதன் முக்கியத்துவத்தையும் விளக்கிக் கூறினார். (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

47



பாதுகாப்பு உத்தியோகத்தர் . கறுப்பர். நல்லவர். எதையும் ஒளிவு மறைவு இன்றி நேருக்கு நேர் சொல்ல வல்லவர். "அமைப்பு? அதுவும் அரசியல் தானே! ஏனைய்யா உனக்கு இந்தவேலை?" என்றார் ஐகே.

ஒபாமா தனது அரசியல் கருத்துக்களையும் வறிய மக்களை ஒன்று திரட்டி சமூகமாக்கி விழித்தெழச் செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

கணனியின் முன் அமர்ந்திருந்து ரொய்ட்டரிலிருந்து (Reuters)வரும் உலகளாவிய செய்திகளை ஆய்வு செய்தல் தான் அவரது பணியாகும். அந்த நிறுவனத்தில் ஒபாமா தான் கறுப்பினத்தைச் சேர்ந்த ஒரேயொரு ஆண்மகன். இது அவருக்கு வெட்கப்பட வேண்டிய ஒன்றாயினும் அலுவலக செயலர்களாகப் பணிபுரிந்த கறுப்பினப் பெண்களைப் பொறுத்தவரை ஒபாமாவைப் பற்றி பெருமிதம் கொண்டார்கள். அவர்கள் ஒபாமா தான் என்றோ ஒருநாள் கம்பனியை எடுத்து நடத்துவார் என்று நம்பினர். மதிய உணவு வேளைகளில் ஒபாமா தனது சமூக அமைப்பாளராகும் கனவுபற்றிக் கூறினால் அவர்கள் ஏமாற்றத்தால் களையிழந்து விடுவர்.

ஐகே என்பவர் அந்த நிறுவனத்தின்

" மிஸ்டர் பரக் நான் உனக்கு ஒரு புத்திமதி சொல்ல விரும்புகிறேன். இந்த அமைப்பு என்ற கதைகளை கைவிட்டு விடு. ஏதாவது செய்து பணம் சம்பாதிக்கப் பார். பேராசைப்பட வேண்டும் என்றல்ல.போதுமென்ற வாழ்வு. அவ்வளவு தான். ஏன் இதைச் சொல்லுகிறேன் தெரியுமா? உன்னில் அடங்கியிருக்கும் ஆற்றல் அத்தகையது. எனக்கு அது தெரிகிறது!

உன்னைப் போன்ற இளைஞன் ஒருவன், அதுவும் அழகான குரல் வளத்தோடு பேச்சு வன்மையும் உடையவன் நீ. ரி.வி. அறிவிப்பாளராக அல்லது விற்பனையாளராக பதவி வகிக்கலாம். நன்றாகப் பணம் சம்பாதிக்கலாம். இன்று எங்களுக்கு அது தான் தேவை. இந்த சனக்கூட்டம் எதற்கு? எவ்வளவு தான் நீ நன்மை செய்தாலும் அவர்கள் நன்றி சொல்லப் போவதில்லை.அது சரி உனக்கு இப்பொழுது என்ன வயதாகிறது?"

"இருபத்தியிரண்டு"

"உனது காலத்தை வீணடிக் காதே மிஸ்டர் பரக். வயதுபோன பின்னர் கவலைப்பட்டு என்ன பிரயோசனம்?"

ஆனால் ஐகே கூறியதை ஒபாமா அப்போது பொருட்படுத்தவில்லை. அவரது வார்த்தைகளில் அம்மப்பாவின் குரல் தொனித்த மாதிரி இருந்தது. சில மாதங்கள் கழிந்தன. சமூக அமைப்பாளராக வேண்டும் என்ற எண்ணம் மெல்ல மெல்ல ஒபாமாவை விட்டு நழுவுவது போல இருந்தது. அவரது கம்பனி அவரை நிதி பற்றிய அறிக்கைகள் தயாரிப்பவராக பதவி உயர்வு வழங்கியது. அவருக்கென்று அலுவலகம், தனிச் செயலர், வங்கியில் பணம் என்று பல வசதிகள் பெருகின.

ஒபாமா சிலவேளைகளில் யப்பானிய நிதியாளர்களுடன் அல்லது ஜேர்மன் கடன் முறி விற்பனையாளர்களுடன் நேர்கண்டு உரையாடிய பின் லிவ்டில் திரும்பி வந்து கொண்டிருப்பார். அப்போதெல்லாம் லிவ்ட் கதவுகளில் தன் பிம்பம் தெரிவதைக் கண்டு களிப்பார். கையில் பிறீவ்கேஸ், கோட் சூட் என்று ஆஜானுபாகுவாக காட்சி தரும் தன்னுருவம் கண்டு ஒரு கணம் நிதிச் சேவைத் தொழிலில் தன்னை ஒரு முடிசூடாமன்னன் என்று எண்ணிக் கற்பனையில் மூழ்கி பெருமிதம் கொள்வார். அடுத்த கணம் தனது இலட்சியத்தை மறந்து விட்டதற்காக வருந்துவார். தன் உறுதியின்மை பற்றிய குற்ற உணர்வில் துடிப்பார்.

ஒருநாள் அவர், வட்டிவீதத்தில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி கட்டுரை வரைந்து கொண்டிருந்தார். அப்போது ஔமா தொலை பேசியில் பேசினாள். இவள் ஒபாமாவின் தந்தையின் கென்ய நாட்டு முதல் மனைவியின் குழந்தை. நமது கதாநாயகனின் சகோதரி...ஆயினும் அவளை ஒபாமா நேரில் கண்டதில்லை. அடிக்கடி கடிதப் போக்குவரத்து மாத்திரம் தானிருந்தது.

அவள் ஜேர்மனியில் படிக்கச் சென்றிருந்தாள். அவர்களின் பரஸ்பரக் கடிதங்களில் ஒபாமா ஜேர்மனி சென்று அவளைப் பார்க்கும் வாய்ப்பு ஏற்படலாம் என்றோ அல்லது அவள் அமெரிக்கா வந்து ஒபாமாவைக் காண முடியுமென்றோ குறிப்பிட்டிருந்தனர். ஆனால் திட்டம் காசுமுடையால் கிடப்பில் போடப்பட்டே வந்தது. இருப்பினும் அவர்களுக்கிடையிலான கடிதத் தொடர்பினால் தொலைதூரத்திலும் நல்லுறவு நீடித்தது.

எதிர்பாராமல் அப்போது ஔமாவின் குரல் தொலைபேசியில் முதல் தடவையாகக் கேட்டது. தான் தனது நண்பிகள் சகிதம் அமெரிக்கா வருகிறாளாம். நியூயோர்க் வந்து

ஜம்பொன்

ஒபாமாவை நேரில்காண பெரிதும் ஆவலோடு இருக்கிறாள். தான் பயணிக்கும் விமானத்தின் விபரங்களையும் அவள் கொடுத்து விட்டாள். தனது ஆவலையும் ஆர்வத்தையும் கூறி தன்னுடன் தங்க வேண்டும் என்று சொல்லி வைத்தார். தொடர்ந்து போனில் நிற்க முடியாது. மிகவும் கூடிய கட்டணம் கொடுக்க வேண்டியுள்ளது என்று கூறிய ஔமா போனை துண்டித்துவிட்டாள். (தொடரும்)

# மாட்டின் கலங்களுடன் கலப்பிறப்பாக்கம் செய்து இறந்த சிறுமியை மீள உருவாக்க முடியும்

## பிரித்தானிய மருத்துவர் பரபரப்பு அறிவிப்பு

மனித - மிருக மூலவுயிர்க் கல கலப் பிறப்பாக்க (குளோனிங்) தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அண்மையில் கார் விபத்




தில் இறந்த 10 வயது சிறுமியை யாருவரை தன்னால் மீள உருவாக்க முடியும் என சர்ச்சைக்குரிய பிரித்தானிய மருத்துவர் பனயியோரிஸ் சாவோஸ் அறிவித்துள்ளார்.

தான் அண்மையில் இறந்த காடி என்ற மேற்படி சிறுமியின் குருதிக் கலங்களையும் மாடொன்றின் கரு முட்டையையும் இணைத்து மனித - மிருக மூலவுயிர்க்கலத்தை உருவாக்கியுள்ளதாகவும் அச்சு அசலாக காடியை ஒத்த குழந்தையொன்றை தன்னால் உருவாக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

பரிசோதனைக் குழாயைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டு உறைநிலையில் பேணப்பட்டுள்ள இந்த மனித - மிருக மூலவுயிர்க் கலத்தை வெற்று மனித முட்டையில் பதித்து இரட்டை கலப்பிறப்பாக்க செயன்முறையொன்றுக்கு உட்படுத்த முடியும் என அவர் கூறினார்.

இந்நிலையில் அமெரிக்கப் பிரஜையான காடியின் தாயார் மேற்படி கலப் பிறப்பாக்க செயன்முறைக்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

எனினும், பிரித்தானியா உள்ளடங்கலான உலக நாடுகள் பலவற்றில் மனித கலப் பிறப்பாக்க செயன் முறையானது சட்ட விரோதமானதாகும்.

அதேசமயம் இதற்கு முன் நான்கு பெண்களின் கருப்பைத்தோல் கலங்களிலிருந்து கலப் பிறப்பாக்கம் மூலம் 14 மூலவுயிர்க்கலங்களை வெற்றிகரமாக உருவாக்கியதாக



தெரிவித்த சாவோஸ், எனினும் அம் மூலவுயிர்க் கலங்களைப் பயன்படுத்தி குழந்தைகள் எதுவும் பிரசவிக்கப்படவில்லை என்று கூறினார். (ஓ-6)

## தீயை அணைக்க முயன்ற 13 இராணுவ வீரர்கள் பலி

(காத்மண்ட்)

காட்டு தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்ட நேபாள இராணுவ வீரர்கள் 13 பேர் பரிதாபமாக பலியாகினர்.

நேபாளத்தில் மந்தலி என்ற அடர்ந்த வனப் பகுதி உள்ளது. இங்கு திடீரென தீப்பற்றியது. மள, மளவென வனப் பகுதி முழுவதும் தீ பரவியது. அருகில் உள்ள அரச மருத்துவமனைக்கும் தீ பரவும் நிலை ஏற்பட்டது.

உள்ளூர் மக்கள் உதவியுடன் நேபாள இராணுவ வீரர்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். எதிர்பாராத விதமாக 13 இராணுவ வீரர்கள் தீயில் கருகி பலியாகினர். (ஓ-6)

## உலக தரிசனம்

## பிரித்தானிய பாராளுமன்ற சதுக்கத்தில் 17ஆவது நாளாக நடைபெற்ற போராட்டத்தில் மாணவர்கள் பங்கேற்பு

(லண்டன்)

கடந்த புதன்கிழமையன்று பிரித்தானியாவின் பாராளுமன்ற சதுக்கத்தில் 17 ஆவது நாளாக நடைபெற்ற போராட்டத்தில் ஆயிரக்




கணக்கான மாணவர்கள் தமது பாடசாலைகளை புறக்கணித்து கலந்து கொண்டனர். காலை 9 மணி முதல் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் பாராளுமன்ற சதுக்கத்தை நிறைத்தனர்.

சிறியவர்கள் முதல் உயர்தர வகுப்பு மாணவர்கள் வரை தமது பாடசாலை சீருடையில் சதுக்கத்தின் நான்கு பக்கமும் வன்னி படுகொலை குறித்த படங்களையும் பதாகைகளையும் தாங்கியவர்களாக நின்றனர்.

இலங்கை அரசாங்கத்தை கண்டித்தும் பிரித்தானிய, சர்வதேச அரசாங்கங்களிடம் நீதி வேண்டியும் தொடர் ந்து குரல் எழுப்பிய வண் ணம் இருந்தனர். சர்வதேசமே கைவிட்ட தமது உறவுகளின் துயர் துடைக்க பாடசாலைகளை புறக்கணித்து சிறியவர்கள் கூட இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டது பலரது கவனத்தையும் ஈர்த்தது. பிரித்தானியாவில் அன்றையதினம் வருடாந்தவரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்டது.

மிகக் கூடுதலான பாராளுமன்ற உறுப் பினர்கள் அன்றைய தினம் கலந்து கொள்வதாலும் பிரதமரின் வாராந்த கேள்வி நேரம் புதன் கிழமைகளில் நடை பெறுவதாலும் இந்தப் போராட்டம் முக்கியத்துவம் மிக்கதாக அமைந்தது. அன்றைய தினம் ஆங்கிலப் பத்திரிகையாளர்களும் பெருமளவில் காணப்பட்டார்கள். (ஓ-6)

## கிருஸ்ணா அம்பலவாணரின் உண்ணாவிரதம் முடிபுக்கு வந்தது

இலங்கையில் உடனடிப் போர் நிறுத்தம், அங்கே அல்லற்படும் மக்களுக்கு உடனடி உணவு மற்றும் மருத்துவ உதவி உட்பட 5 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த ஏப்ரல் 13 ஆம் திகதி தொடக்கம் சாகும் வரையிலான உண்ணாநிலைப் போராட்டத்தினை மேற்கொண்டு வந்த சுவிஸ் தமிழர் பேரவையின் இணைப்பாளர் கிருஸ்ணா அம்பலவாணரின் உண்ணாநிலைப் போராட்டம் 11 நாட்களுக்குப் பின்னர் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 நிமிடத்துக்கு முடிபுக்கு வந்தது.

சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி பிரான்சிஸ்கா ரொய்ஷர், கார்லோ சொம்மறுகா ஆகியோர் சுவிஸ் வெளிவிவகாரத்துறை அமைச்சின் அலுவலகத்துக்கு முன்பாக பழச்சாறு கொடுத்து உண்ணாநிலைப் போராட்டத்தினை முடித்து வைத்தனர்.

ஏப்ரல் 13 ஆம் திகதி தொடக்கம் உண்ணாநிலை இருந்து வந்த கிருஸ்ணா அம்பலவாணர் ஏப்ரல் 15 ஆம் திகதி காவல்துறையினரால் பலாத்காரமாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் அவர் அங்கும் தனது உண்ணாநிலைப் போராட்டத்தினை தொடர்ந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## அபூர்வ பால்வெளித் தோற்றம்

"ஆர்ப் 194" என்ற அபூர்வ பால்வெளித் தோற்றமானது நாசா மற்றும் ஈஸா ஹபிள் விண்வெளி தொலைக்காட்டியால் 19 வருடகால முயற்சிக்குப் பின் வெற்றிகரமாக படம்



பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த புகைப் படத்தை நாசா கடந்த புதன்கிழமை வெளிவிட்டுள்ளது. ஒரு இலட்சம் ஒளியாண்டுகள் தொலைவுக்கு பரந்துள்ள பல பில்லியன் நட்சத்திரக் கூட்டங்களை இந்த புகைப் படம் உள்ளடக் கியுள்ளமை சிறப்பம்சமாகும். (ஓ-6)

## பொதுமக்கள் வெளியேற அனுமதிக்காவிட்டால் உயிரிழப்புகள் அதிகரிக்கும் அபாயம்

### அவுஸ்திரேலியா எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் வட பகுதியில் மோதல்கள் நடைபெறும் வலயத்திலிருந்து கடந்த 20 ஆம் திகதி முதல் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் வெளியேறுவது சாத்தியமாகியுள்ளதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் மிகவும் வரவேற்பளிப்பதாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஸ்டீபன் ஸ்மித்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே புதிதாக மோதல்கள் நடைபெறுவது அதிகரித்துள்ள நிலையில், அப்பிராந்தியங்களில் தொடர்ந்தும் பல பொதுமக்கள் சிக்கியுள்ளது குறித்து அவுஸ்திரேலியா ஆழ்ந்த கவலையடைந்துள்ளது.

ஏற்கனவே பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளமை வருந்தத்தக்கது. மோதல்கள் நடைபெறும் வலயத்திலிருந்து பொதுமக்களை வெளியேற இரு தரப்பினரும் அனுமதிக்காவிட்டால் மேலும் உயிரிழப்புக்கள் இடம்பெறுவது தவிர்க்க முடியாதது.

தாக்குதல்களை நடத்துவதை நிறுத்தவும் மோதல்கள் நடைபெறும் இடங்களிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பாக வெளியேற அனுமதிக்கும் வகையில் புதிய போர் நிறுத்தமொன்றை அறிவிக்கவும் இலங்கை அரசாங்கத்திற்கு அவுஸ்திரேலியா மீள அழைப்பு விடுக்கிறது.

அத்துடன், அரசாங்கம் உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்களுக்கான முகாம்களை பொதுமக்கள் பாதுகாப்பாக சென்றடைவதை உறுதிப்படுத்தவும் வேண்டும். அத்துடன் மேற்படி முகாம்கள் சர்வதேச மனிதாபிமான நியமத் தராதரங்களுக்கு அமைவாக நிர்வகிக்கப்படவும் வேண்டும்.

இலங்கை தமிழ் பிரஜைகள் மற்றும் ஏனைய சிறுபான்மை சமூகங்களை இணைத்து பயனளிக்கக் கூடிய அரசியல் சீர்திருத்தமொன்றை முன்னெடுக்க வேண்டும். என இலங்கை அரசாங்கத்திற்கு மீளவும் அழைப்பு விடுக்கிறோம் என அந்த அறிக்கையில் ஸ்டீபன் ஸ்மித் தெரிவித்திருந்தார். (ஓ-6)

## ஈராக்கில் மனித குண்டு தாக்குதல் 70 பேர் பலி பலர் காயம்

(பாக்தாத்)

ஈராக்கில் தீவிரவாதிகள் தொடர்ந்து மனித குண்டு தாக்குதல் நடத்தி வருகிறார்கள். தலை



நகரம் பாக்தாத் மத்திய பகுதியில் பொதுமக்களுக்கு இலவசமாக உணவுப் பொருட்களை வழங்கினார்கள். இதை வாங்குவதற்கு ஏராளமானோர் கூடி நின்றனர்.

அப்போது மனிதகுண்டு தீவிரவாதி ஒருவன் உள்ளே புகுந்து குண்டை வெடிக்க செய்தான். அதில் 5 சிறுவர்கள் உட்பட 30 பேர் பலியானார்கள். 50 பேர் காயம் அடைந்தனர்.

இதே போல முகாதியா என்ற இடத்திலும் மனிதக் குண்டு தாக்குதல் நடந்தது. இங்கு ஷியா முஸ்லிம்களின் வழிபாட்டு ஸ்தலம் ஒன்று உள்ளது.

தினமும் ஏராளமான பக்தர்கள் வெளியூர்களில் இருந்து இங்கு வழிபாடு நடத்த வருவது உண்டு.

அவர்கள் அங்குள்ள ஹோட்டலில் சாப் பிட்டு கொண்டிருந்தனர். அப்போது மனித குண்டு தீவிரவாதி உள்ளே புகுந்து குண்டை வெடிக்கச் செய்தான். இதில் 40 பேர் பலியா னார்கள். 68 பேர் காயம் அடைந்தனர். இரு தாக்குதல்களிலும் சேர்த்து 70 பேர் பலி யானார்கள். (ஓ-6)

# விடுதலைப்புலிகள் இயக்கம் அரசியலால்தான் உருவானது

## முன்னாள் பிரதமர் தேவேகவுடா

(ஹசன்)

முன்னாள் பிரதமரும், மத சார்பற்ற ஜனதா தளம் கட்சி தலைவருமான எச்.டி. தேவகவுடா தெரிவித்துள்ளார். கர்நாடக மாநிலம் ஹசன் மாவட்டத்தில் உள்ள பசன் கைய்ப்பட்னா என்ற இடத்தில் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் எனது நண்பர் என தமிழக முதல் அமைச்சர் கருணாநிதி தெரிவித்திருந்தார்.

ஆனால் அவரது கருத்துக்கு பிரதமர் மன்மோகன் சிங்கும், காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியும் இதுவரை கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. மௌனம் சாதிக்கின்றனர். இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

பிரபாகரனை சரண் அடையும் படி இலங்கை அரசு வலியுறுத்தி வருகிறது. ஆனால் என்ன நடைபெறுகிறது என்று தெரியவில்லை. அவர் தப்புவாரா? அல்லது தற்கொலை செய்வாரா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். எனவே இது குறித்து என்னால் கருத்துக்கூற முடியாது.

விடுதலைப்புலிகள் இயக்கம் அரசியலால் தான் உருவானது. இது அரசியலால்தான் அழியும். தென் ஆபிரிக்காவில் நிறவெறி கொள்கையை எதிர்த்து நெல்சன் மண்டேலா போராடினார். இதற்காக 30 வருடங்கள் சிறையில் வாடினார். அதன் பிறகுதான் தனது போராட்டத்தில் வெற்றிபெற்றார் என்றார். (ஓ-6)

# பத்மஸ்ரீ விருதை திருப்பி அனுப்புவதாக இயக்குநர் பாரதிராஜா அறிவிப்பு



(சென்னை)

இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய உத்தரவிடாதத்தைக் கண்டித்து மத்திய அரசு தனக்கு வழங்கிய பத்மஸ்ரீ விருதை திருப்பி அனுப்புவதாக தமிழ்த் திரைப்பட இயக்குநர்கள் சங்கத் தலைவர் பாரதிராஜா அறிவித்துள்ளார்.

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து போராடுவதற்காக தமிழ் திரையுலகினர் சார்பில் திரையுலக தமிழீழ ஆதரவு இயக்கம் என்ற அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது. இதன் சார்பில் திரைப்பட வர்த்தகசபை (சென்னை பிலிம் சேம்பர்) வளாகத்தில் நேற்று தொடர் முழக்கப் போராட்டம் நடைபெற்றது. காலை 9 மணிக்கு தொடங்கிய இந்தப் போராட்டம் இரவு 7 மணிவரை நடைபெற்றது.

இப்போராட்டத்தில் திரைப்பட நடிகர், நடிகைகள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், வழக்கறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், மாணவர்கள், மாதர் சங்கத்தினர், இலக்கியவாதிகள், ஓவியர்கள், கலைஞர்கள், தமிழ் உணர்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டனர்.


கூட்ட முடிவில் பேசிய இயக்குநர்கள் சங்கத் தலைவர் பாரதிராஜா, இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய உத்தரவிடாத மத்திய அரசு தனக்கு வழங்கிய பத்மஸ்ரீ விருதை மீண்டும் மத்திய அரசுக்கே திருப்பி அனுப்புவதாக அறிவித்தார்.

இலங்கை தமிழர் பிரச்சினைக்காக தாம் மனம் நொந்து இருக்கும் இந்த சூழ்நிலையில், போர் நிறுத்தம் செய்யாத மத்திய அரசு வழங்கிய இந்த பத்மஸ்ரீ விருது, தனது மிகப்பெரிய உறுத்தலாக இருப்பதாகவும், அதனால் அந்த விருதை திருப்பி அனுப்புவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஓ-6)

### இலங்கைத் தமிழர்களுக்காக

# இன்னும் வேகமாக குரலை உயர்த்தி தமிழர்களெல்லாம் ஒன்றுகூடுவோம்

## கருணாநிதி அழைப்பு



(சென்னை)

ஒரு நாள் வேலை நிறுத்தத்தை முன் உதாரணமாகக் கொண்டு இலங்கைத் தமிழர்களுக்காக இன்னும் வேகமாக நம் குரலை உயர்த்தி இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட மத்திய அரசை வலியுறுத்துவோம். தமிழர்களெல்லாம் ஒன்றுகூடுவோம் என்று முதல்வர் கருணாநிதி தமிழக மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள கவிதை வடிவ அறிக்கை வருமாறு,

இலங்கையில் தினமும் உயிரிழந்து வரும் தமிழர்களுக்காக உணர்ச்சியுள்ள தமிழர்களெல்லாம் வாடுகிறோம். செல்வா காலம் முதல் சிங்களவர்களின் ஆதிக்கத்தை வீழ்த்த சிறைச்சாலை, சிம்மாசனம் இழப்பு என்று எத்தனையோ சித்திரவதை கண்டோம். இந்தியாவில் மலை முகடுகளிலும், வனப் பகுதிகளிலும் பாசறை அமைத்து கடினமான பயிற்சியும் வழங்கி, தமிழ் விடுதலைப் போராளிகளாக்கினோம்.

ஒற்றுமையாய் இருந்த விடுதலைப் போராளிகளில், சிங்களவர் சூழ்ச்சியால் அவர்களாகவே ஆளுக்கொரு ஆயுதம் ஏந்தி அழித்துக்கொண்டனர். சிங்களவர்களின் சூழ்ச்சியால் தமிழர்களின் ஒற்றுமை சீரழிந்து போய்விட்டது. இதனால் அங்கும் யுத்தம் அவர்களை ஆதரிக்கும் இங்கும் அதே யுத்தம். இரு தரப்பிலும் குற்றம் சுமத்துவதால் இனி எந்தப் பயனும் இல்லை. இனி மேலும் அமைதி காத்தால் தமிழர்கள் கூண்டோடு அழிக்கப்பட்டு விடுவர்.

ஆகவே, தமிழினத்தைக் காப்பதற்கு ஒரு நாள் வேலை நிறுத்தத்திற்கு அனைவரையும் அழைத்தோம். காங்கிரஸ் கட்சியும் போர் நிறுத்த தீர்மானத்துடன், மத்திய அரசின் அமைச்சரவையும் கூடி அதே கருத்தை வலியுறுத்தியுள்ளனர். இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட மத்திய அரசை வலியுறுத்த இன்னும் வேகமாக நம் குரலை உயர்த்தி, தமிழர்களைக் காக்க வழி செய்வோம்.

இந்த ஒருநாள் வேலை நிறுத்தத்தை விமர்சிப்பவர்களையும், கபட நாடகமென்றும் கூறுவோரையும் நாம் பொருட்படுத்தலாமா? தமிழ் உணர்வு மிகுந்த தமிழரெல்லாம் ஒன்றாய்க் கூடுவோம். வென்றே தீருவோம் இவ்வாறு கருணாநிதி தெரிவித்துள்ளார். (ஓ-6)

# 12 ஆவது நாளாக தொடரும் பெண்களின் உண்ணாவிரதம்

(சென்னை)

இலங்கையில் போரை நிறுத்த வலியுறுத்தி எழும்பூரில் உள்ள ம.தி.மு.க. அலுவலகத்தில் பெண்கள் அமைப்பினர் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

பேராசிரியை சரஸ்வதி தலைமையில் நடைபெற்று வரும் இந்த உண்ணாவிரதப் போராட்டம் கடந்த 13 ஆம் திகதி தொடங்கியது.

நேற்று 12 ஆவது நாளாக உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

கடந்த 2 நாட்களுக்கு முன்பு, உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த 5 பெண்களை அதிகாலையில் பொலிஸார் கைது செய்தனர். இவர்கள் அனைவரும் கீழ்ப்பாக்கம் அரச ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

இவர்கள் 5 பேரும் ஆஸ்பத்திரியிலேயே உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். உண்ணாவிரதம் இருக்கும் பெண்களில் பலர் தொடர்ந்து சோர்வுடனே காணப்படுகின்றனர். இலங்கையில் போரை நிறுத்தும் வரை உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என்று பெண்கள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக உண்ணாவிரதம் நடைபெறும் இடம் அருகே பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது. உண்ணாவிரதம் இருக்கும் பெண்கள் அமைப்பினரை தமிழ் திரையுலகினர் மற்றும் பல்வேறு முக்கிய பிரமுகர்கள் சந்தித்து ஆதரவு தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# இந்திய நடவடிக்கைகளின் பின்னணியில் றோ

## பழ.நெடுமாறன் குற்றச்சாட்டு



(சென்னை)

இலங்கையில் போர் நிறுத்தத்தை இந்திய அரசு வலியுறுத்த மறுத்து வருவதின் பின்னணியில் றோ இருப்பது அம்பலமாகியிருக்கின்றது என்று இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் அமைப்பாளர் பழ. நெடுமாறன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் அமைப்பாளர் பழ.நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் போர் தீவிரமாக் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தக் கால கட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைப் படுகொலை செய்ய றோ உளவுத்துறைச் சதித் திட்டம் தீட்டியுள்ளது என மிக நம்பகமான தகவல் கிடைத்திருக்கிறது.

போர் நிறுத்தத்தை இந்திய அரசு வலியுறுத்த மறுத்து வருவதின் பின்னணி இதுதான் என்பது அம்பலமாகியிருக்கின்றது. (ஓ-6)




### ஈழத்தில் போர் நிறுத்தம் கோரி

# உதவி இயக்குநர் மூன்றாவது நாளாக உண்ணாநிலைப் போராட்டம்

(சென்னை)

தமிழ்நாட்டில் ஈழத் தமிழர்களுக்காக திரைப்பட உதவி இயக்குனரான 35 வயதுடைய மகேந்திரவர்மன் என்பவர் காலவரையற்ற உண்ணா நிலைப்போராட்டத்தினை தொடங்கியுள்ளார்.

இவர் பாஞ்சாலங்குறிச்சி, தம்பி ஆகிய படங்களில் உதவி இயக்குநராகப் பணியாற்றி உள்ளார்.

திருச்சியில் உள்ள புத்தூர் அருணா தியேட்டர் அருகில் உரு தனியார் இடத்தில் தமிழீழ ஆதரவாளர் அமைப்பு சார்பில் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் உண்ணா நிலைப் போராட்டம் மேற்கொண்டு வருகின்றார்.

நேற்றுமுன்தினம் மூன்றாவது நாளாக தனது உண்ணாநிலைப் போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றார்.

உண்ணாநிலைப் போராட்ட பந்தலில் ஈழத் தமிழர் படுகொலையை சித்தரிக்கும் காட்சிகள் மற்றும் தாய்த் தமிழகமே எமக்காகவும் கொஞ்சம் குரல் கொடுங்களேன் என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகள் கட்டப்பட்டிருந்தன. (ஓ-6)

### ஈழத் தமிழர்களை காக்கக் கோரி

# அ.தி.மு.க.தொண்டர் தீக்குளித்து மரணம்

(சென்னை)

ஈழத்தமிழர்களை காக்கக் கோரி பண்ருட்டியை சேர்ந்த அ.தி.மு.க தொண்டரான சுப்பிரமணி (வயது43) என்பவர் கடந்த வியாழக்கிழமை திடீரென்று கொளத்தூர் பாளையம் என்ற இடத்தில் ஈழத்தமிழர்க்ளுக்காக உயிர்விடுகிறேன் என்று தீக்குளித்தார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவர் திருப்பூரில் உள்ள பனியன் தொழிற்சாலையில் வேலை செய்துவந்தார். இவருக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் , மனைவி உள்ளனர்.

இலங்கையில் ஈழத்தமிழர்கள் போரில் சிக்கி தவிப்பதை பற்றி அடிக்கடி தனது குடும்பத்தாரிடமும், நண்பர்களிடமும் பேசி வந்த இவர் வியாழக்கிழமை திடீரென கொளத்தூர் பாளையம் என்ற இடத்தில் ஈழத் தமிழர்களுக்காக உயிர்விடுகின்றேன் என்று தீக்குளித்தார்.

இதையடுத்து அப்பகுதி மக்கள் சுப்பிரமணியை அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர்.

90 சதவீதத்திற்கு மேல் தீக்காயங்களுடன் இருந்த அவர், சிகிச்சை பலனின்றி வியாழன் மாலை 6 மணிக்கு உயிரிழந்தார். இவர் ஈழத்தமிழர்களுக்காக உயிர்விடுவதை பற்றி தனது டயறியில் எழுதி வைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஓ-6)

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

### களைகள் (Weeds)

வேளாண் செய்கையில் "களைகள்" முக்கியமானதொரு பிரச்சினையாகும். "களைகள்" களைதலுடன் ஒத்துப் போயிருப்பதைப் பாருங்கள். இன்னும் சற்றே உற்று நோக்கினால் எங்களூர் கமக்காரர்கள் (ஏனையோரும் தான்!) களைகளைக் களைவதில் களைத்து விட்டார்கள்! புல்லுருவிகளை, தீயனவற்றை களைந்தெறிய வேண்டுமென்பார்கள். இதையே இன்னொன்றாக பாட்டிலே "*நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்குமாங்கே பொசிந்ததாம்..*" என்றறிவோம். எங்கள் தமிழுக்கு இப்படியொரு நளினம், பலம். இன்னும் பல வியாக்கியானங்களுமுண்டு.

களை என்பது "களைதல்" என்று தானே உடனடிப் பொருள் தருகிறது. பெயர்ச்சொல்லே வினையாகியும் இருக்கிறது. கவனியாது விட்டதால் வந்த களை வினையாகி, வந்தேறு குடியாகி இப்போது தலையிடியாகவும் மாறி விட்டது. புதிர் என்ன இன்னும் விளங்கவில்லையா! வந்த களை என்று "பாத்தீனியத்தை" குறிப்பிட்டேன். அண்டை நாடு ஆதரவு தரவந்து அள்ளித்தந்து விட்டுப்போன "களை" இது. இப்போது எம்மவருக்கு தலையிடியாகி விட்டது. தங்களது தலையிடியை எங்களுக்கும் தந்து தலைமேல் இடியாக இடித்து விட்டனர். அழிக்கவே முடியவில்லை.

### வேளாண்மையில் களைகள் - வேண்டத்தகாதவை

வேளாண் செய்கையில் களைகள் என்றுமே விரும்பத்தகாதனவாகும். களை முகாமைத்துவம் என்பது பயிர்ச் செய்கையில் பாரிய ஒரு பிரச்சினையாகவே எங்களூர் கமக்காரர்களினால் இனங்காணப்பட்டுள்ளது.

பயிர்ச் செய்கை நிலத்தில் தானாகவே தோன்றி ஆங்காங்கே பயிருக்கு என இடுகின்ற பசளைகள், நீர் போன்றவற்றை பெற்று பயிர்களுடன் போட்டி போட்டு வளர்வதனாலும், இவற்றிலிருந்து எந்தவிதமான பிரயோசனத்தையும் பெற முடியாதிருப்பதனாலும் வேளாண் செய்கையில் "இவை" என்றுமே வேண்டத் தகாதனவாகும்.

### முதல் போட்டி நிலத்திற்கு - பயிர் வளரும் மண்ணுக்கு

போட்டி என்னும் போது களைகள் முதலில் போட்டி போடுவது வளரும் நிலத்திற்கு அதுவும் பயிர்வளர்வதற்கான பயிருக்கு சொந்தமான மண்ணுக்கு. ஒரு தாவரத்திற்கு இன்னொரு தாவரம் போட்டி. ஒரு உயிரினத்திற்கு அதே உயிரினம் தானே போட்டி. விஞ்




ஞான ரீதியில் இப்படிச் சொல்லலாம். ஒரு இனத்திற்கு அதே இனமும் இன்னொரு இனமும் போட்டியாக இருக்கும் முதலாவதை இனத்துக்குள்ளான (Intra Specific) போட்டியெனவும் மற்றையதை இனங்களுக்கிடையிலான(Inter Specific) போட்டியெனவும் கொள்ளலாம். இனமொன்றினுள்ளான போட்டி பல இடங்களில் முதன்மை பெற்றிருந்தாலும் களைகளைப் பொறுத்தவரையில் இனங்களுக்கிடையிலான போட்டியாகவே உருவெடுத்துள்ளது. இதைப்பற்றி விரிவாக அலச முன்பு இனமொன்றினுள்ளான போட்டிக்கு உதாரணம் காண முடிகிறதா பாருங்கள்!

விடை தேடுவது மிகவும் சுலபம் ஆனால் அதனை ஜீரணிப்பது மிகவும் கடினம். இனமொன்றினுள்ளான போட்டிக்கு ஒரு மனிதனுடன் இன்னொரு மனிதன் போட்டியிடுவதை குறிப்பிடலாம். மனிதனை மனிதன் அழிப்பதுவும் இதனால் தான். ஒருவனை அழித்து இன்னொருவன் வாழ நினைக்கும் இந்த போட்டி நிறைந்த வாழ்க்கை மிருகமொன்றினுள் இருக்கும் மிருக உணர்வு. மிருகங்களில் மனித உணர்வு இருக்கின்றதென விழிக்கின்றீர்களா? ஏன் இல்லை? பூனைக்குட்டிக்கு பால் கொடுக்கும் நாய் புலிக்குட்டியை வளர்க்கும் கரடி இப்படி பல உதாரணங்களுண்டு. இது மனித உணர்வுக்கு மேலே தாய்மை உணர்வு என ஆகும்.

ஒன்று இன்னொன்றை விட எதில் சிறந்தது? ஒவ்வொன்றிற்கும் தனித்தன்மையும், தனித்துவமும், இருக்கும். அதன்படி ஒவ்வொன்றுமே சிறந்தது. ஒன்றை ஆள இன்னொன்று நினைக்கும் போது தானே பிரச்சினை ஆரம்பம். இது மனிதருக்குள் மட்டுமல்ல தாவரங்களுக்குள்ளும் ஏன்? இன்னும் ஏனைய ஜீவராசிகளுக்குள்ளும் இருக்கின்றது.

ஒரு வகையில் பார்த்தால் பசுமையில் புரட்சியென்று நாமும் சுயநலவாதிகள் தான். மண்ணில் தானாகவே வளரும் தாவரத்தை அது களையென்று சொல்லி, வேண்டத்தகாதன என்றும் பிரயோசனம் எதுவுமற்றதென்றும் கூறி அதனை அழிக்கின்றோம். மாறாக இன்னொரு பக்கத்தில் 'களை' எனப்படுபவை மருந்தாக மூலிகைகளாக பயன்படுத்தப்படுகின்றன. இது பற்றி இன்னொரு இடத்தில் விரிவாக அலசுவோம்.

### இரண்டாவது போட்டி - நீருக்காக

*நெல்லுக்கிறைத்த நீர் புல்லுக்கு...* என்பதில் நீருக்கான போட்டி முக்கியத்துவம் பெறுகின்றது. எங்களுக்கு தேவையானவை, அல்லது பிரயோசனமானவை என கருதுவதனால் பயிர்கள் மட்டுமே முக்கியமானதாகின்றன. பயிர்களை மையப்படுத்திய வேளாண் செய்கையாதலினால் நீர் பாய்ச்சும் போது அது முழுவதுமாக பயிருக்கே சென்றடைய வேண்டுமென்ற எமது எதிர்பார்ப்பு பொய்த்து பயிர்பெறமுன்பும், பயிர் அகத்துறிஞ்சும் போதும், பயிருறுஞ்சிய பின்னரும் நீரை களைகள் பெற்றுக் கொள்கின்ற தன்மையை அவதானிக்கலாம்.

பயிர்களுக்கென பாய்ச்சும் நீரை "களைகள்" பெற்றுக்கொள்வதனை இந்தப் போட்டியில் சேர்த்திருக்கிறோம். பயிருக்கென இறைக்கின்ற நீரை பயிர்பெற முன்பே களைகள் பெறுவதனை நீர் இறைத்த எங்களூர் விவசாயி விரும்பியிருக்காத நிலையில் களைகள் நீரை விரயஞ் செய்தனவாகின்றன. ஆனால் பயிருக்கு தேவையான நீர் போக மீதி மண்ணினுள்ளே யோடி வீணாகத் தான் போய்விடும்.



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


இந்த இடத்தில் "களை" பெறும் நீரை பயனுள்ளதாக்க இரண்டு வழிகளுண்டு.

வழி ஒன்று - "களை" யென கருதப்படுவனவற்றை பயனுள்ளதாக ஆக்குதல். உதாரணத்திற்கு 'காவிளாய்' என்னும் களையை நோக்குவோம். காவிளாய் ஒரு அவரையினத்தைச் சேர்ந்த தாவரம். ஆனால் இதிலிருந்து குறிப்பிடத்தக்க பயனேதும் பெறப்படாவிட்டாலும் இது அவரையினத்தைச் சார்ந்ததனால் வளியிலுள்ள நைதரசனை அல்லது தழைச்சத்தை வேர் முடிச்சுக்களாக (Nodules) வேரிலுள்ள இறைசோபியம் என்னும் பக்ரீறியாவுடன் இணைந்து (Symbiosis) உருவாக்கும். இவ் வேர் முடிச்சுகள் மண்ணில் பிரிந்தழியும் போது தழைச்சத்து மண்ணில் பதிக்கப்படும். இவ்வாறான களையிலிருந்து தழைச்சத்தை மண்ணில் நிலை நாட்டும் சாத்தியம் உண்டல்லவா. சராசரியாக 50% பூக்கும் நிலையில் 'காவிளாய்' களையை வெட்டிப் பிரட்டி விடுவது நல்லது. இதன் மூலம் மண்ணில் தழைச்சத்தினளவை அதிகரிக்கக் கூடியதாக இருப்பதுடன் அதே மண்ணில் சேதன பொருளின் கலவையினளவை அதிகரிக்கவும் முடியும். (தொடரும்)

# உயிர்வாயு (Bio gas) உற்பத்தி

பெரும்பாலான யாழ்ப்பாணத்து மக்கள் சமையல் தேவைகளுக்கான எரிபொருளாக விறகையே நம்பியுள்ளார்கள். விறகின் தேவையும் அதன் பெறுமதியும் ஏ9 பாதை மூடிய பின்னர் மேலும் அதிகரித்தது. இதனால் மாற்றுச் சக்தி வளங்களைப் பற்றி சிந்திக்க வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டது.

எமது பிரதேச சூழ்நிலைமைக்கு ஏற்ற சூழலை மாசுபடுத்தாத ஒரு சக்தி வளமாக உயிர்வாயு உற்பத்தியினை நாம் மேற்கொள்ளலாம். ஏனெனில் எமது பிரதேசத்தில் வசிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயிகள், அவர்களிடம் குறிப்பிடத்தக்களவு கால் நடைகள் உள்ளன.



உயிர் வாயுவினை உற்பத்தி செய்வதற்கு மூலப் பொருளாக கால் நடைகளின் கழிவுகளே பயன்படுத்தப்படுகின்றது. உயிர்வாயு உற்பத்தியின் பின்னர் விலங்குக் கழிவுகளை வழமைபோல் பயிர்களுக்கு உரமாக பாவிக்க முடியும். ஏனெனில் இவ்விலங்குக் கழிவுகள் அளவிலோ அல்லது போசனைத் தரத்திலோ எவ்விதத்திலும் குறைவது இல்லை. அத்தோடு இது துர்மணம் அற்றதாக இருக்கும். உயிர்வாயு உற்பத்தி செயன்முறையின் போது மெதேனை உற்பத்தியாக்கும் காற்றின்றி வாழ் பக்ரீறியாக்கள் செலுலோசு (நாற்பொருள்) இனையே தனது தொழிற்பாட்டிற்காகப் பயன்படுத்துகின்றது.

உயிர்வாயு உற்பத்தி என்பது ஒரு புதிய விடயமல்ல. 200 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வழக்கத்திலுள்ள விடயமாகும். இதனை மேலைத்தேய நாடுகளில் வீடுகளை வெப்பமாக்கவும், சமையல் தேவைகளுக்காகவும், விளக்குகளை ஒளிரூட்டவும் பயன்படுத்துகின்றார்கள்.

இதற்கு உதாரணமாக, லண்டன் நகரத்திலுள்ள தெரு விளக்குகளை ஒளிரப் பண்ண உயிர் வாயுவைப் பயன் படுத்துகின்றார்கள். இவ்விளக்குகளை "வாயு விளக்கு" என அழைப்பார்கள்.

உயிர் வாயுவானது மெதேன் (CH4) 55-65% , காபனீர் ஒட்சைட்டு($Co_2$) 35-45% , அமோனியா (NH3) 0-3% மற்றும் ஐதரசன் சல்பைட்டு 1% வாயுக்களைக் கொண்ட கலவையாகும். ஒட்சிசன் அற்ற நிலையிலும், தேவையான அளவு திரவ நிலை சேதனப் பதார்த்தங்கள் உள்ள நிலையிலும் மில்லியன் கணக்கான காற்றின்றிய வாழ் பக்ரீறியாக்களின் தொழிற்பாட்டினால் உயிர்வாயு உற்பத்தியாக்கப்படுகின்றது.

இந் நுண்ணங்கிகளின் வளர்ச்சியும் தொழிற்பாடும் தாவர உண்ணிகளின் கழிவுகளிலேயே அதிகமாக இருக்கும். ஆனாலும் உயிர் வாயுவானது சதுப்பு நிலங்களிலும் குளங்களின் அடியிலும் உற்பத்தியாகக் கொண்டு தான் இருக்கின்றது.

மெதேன் உற்பத்தியாக்கும் பக்ரீறியாக்கள் மற்றும் அமிலம் உற்பத்தியாக்கும் பக்ரீறியாக்களின் இணைந்த தொழிற்பாட்டினாலேயே உயிர்வாயு உற்பத்தியாக்கப்படுகின்றது. மெதேன் உற்பத்தியாக்கும் பக்ரீறியாக்கள் குறித்த வெப்பநிலை, அமில கார நிலை (PH) இலேயே வளரும். ஆனால் அமிலம் உற்பத்தியாக்கும் பக்ரீறியாக்கள் எல்லா வெப்பநிலைகளிலும் வளரும் மெதேன் பக்ரீறியாவின் வளர்ச்சிக்கு,

வெப்பநிலை ($95^0$f)

அமில கார நிலை (PH) 6.6-7.6


ஒட்சிசன் அற்ற நிலை

தொடர்ச்சியான விலங்கு கழிவுகளின் விநியோகம் ஆகியன அத்தியாவசியமாகும்.

உயிர்வாயு உற்பத்தியாக்கியை உருவாக்க தேவையான பொருட்கள்.

தண்ணீர்தாங்கி, (Myllor) பலூன், T-இணைப்பு, பிளாஸ்ரிக் குழாய், திருகு, தொடர்ச்சியான விலங்குக் கழிவுகளின் விநியோகம்.

### உயிர் வாயு உற்பத்தியை வடிவமைத்தல்





மேலே உள்ளது போன்ற அமைப்பினை உருவாக்கி பின்னர் தாங்கியினை விலங்குக் கழிவினால் நிரப்புதல் வேண்டும். இரண்டு நாள் இடைவெளியில் காயாத உடன் விலங்குக் கழிவினை தண்ணீருடன் நன்றாக கலந்து தாங்கி நிரம்பும் வரை ஊற்ற வேண்டும்.

பின்னர் தாங்கியினை காற்றுப் புகா வண்ணம் இறுக்கமாகப் பூட்டி சூரிய ஒளி படக்கூடிய வெப்பமான இடத்தில் வைக்க வேண்டும்.

யோ. நிருஷாந்தன்
விவசாய உயிரியல் (சிறப்பு)
தகவல் தொடர்பு மையம்
விவசாய பீடம்

தாங்கியில் உயிர் வாயு உற்பத்தியாக 20-25 நாட்கள் வரை கால அவகாசம் தேவை. ஏனெனில் ஆரம்பத்தில் காற்று வாழ் நுண்ணங்கிகளின் தொழிற்பாட்டினால் காபனீரொட்சைட் ($C0_2$) வாயுவே உற்பத்தியாகும். தாங்கியினுள் உள்ள ஒட்சிசன் நிறைவடைந்ததும் காற்றின்றி வாழ் பக்ரீறியாக்களின் தொழிற்பாடு ஆரம்பிக்கும் இதன்போது மெதேன் வாயு உற்பத்தியாகும்.



### உயிர்வாயு உற்பத்தியை நிறுவுவதனால் ஏற்படும் நன்மைகள்

- எரிபொருள் செலவினைக் குறைக்க முடியும்.
- சூழல் மாசடைதலைத் தடுக்கலாம்.
- விலங்குக் கழிவிலிருந்து வரும் துர்மணம் குறையும்.
- போசனையிலோ அளவிலோ மாறுபடாத உரம் கிடைக்கும்.
- திரவ நிலையில் விலங்குக் கழிவுகள் இருப்பதனால் தாவரங்களினால் இலகுவாக அகத்துறிஞ்சலாம்.
- திரவ உரத்தினை நீண்ட காலத்திற்கு சேமித்து வைக்க முடியும் ஏனெனில் இதில் பூச்சித்தாக்கம் குறைவு.

உயிர்வாயு உற்பத்தியினை தினசரி முகாமைத்துவம் செய்வதும் ஆரம்ப வடிவமைப்புச் செலவு அதிகமாக இருப்பதுமே இதன் குறைபாடாகும்.

எமது வளத்தினைப் பயன்படுத்தி எமது சூழலை பாதுகாத்து எம்மையும் வளப்படுத்துவோமாக.

**குறிப்பு**

சேதன விவசாயம் காலத்தின் தேவை என்ற ஆக்கத்தின் தொடர்ச்சி அடுத்த வாரம் வெளிவரும் என்பதை அறியத் தருகின்றோம்.

துன்பத்தைக் கண்டு இரங்குதல் மனிதாபிமானம்தான். அதை நீக்குவதே தெய்வீகம்.

– இந்தியா

வலம்புரி

## இடம்பெயர்ந்து வருபவர்களை காரைநகரில் தங்க வையுங்கள்

வன்னியில் இருந்துவரும் மக்களை பாடசாலைகளில் தங்க வைத்தபின்னர் அவர்களை முகாம்களில் இருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கட்டாந்தரைகளில் சிறிய குடிசைகளை அமைத்து அவர்களை தங்க வைப்பதென்பது போரினால் பாதிக்கப்பட்ட மக்களை மேலும் வதைப்பதாக இருக்கும்.

யுத்த அழிவுகளைச் சுமந்து கொண்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்வதைத் தவிர வேறு எதுவும் இல்லை என்ற கையறு நிலையில் உள்ள மக்களை தகுந்த முறையில் பராமரிப்பது அனைவரினதும் தலையாய கடமையாகும்.

யுத்தத்தால் எல்லாவற்றையும் இழந்து வந்துள்ள மக்களை சரியான இடங்களில் தங்க வைப்பது முதற்பணியாகும்.

அவ்வகையில் யாழ்ப்பாணத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள காரைநகர், நிலப்பரப்பில் விஸ்தீரமானதாகவும், ஆட்களற்ற குடிமனைகளைக் கொண்டதாகவும் இருப்பதுடன், தனியான உதவி அரச அதிபர் பிரிவு, தனித்துவமான பிரதேச சபை ஆகிய வசதிகளையும் கொண்டுள்ளது.

அதேநேரம் பாதுகாப்புக் காரணங்களுக்காகவே வன்னியில் இருந்துவரும் மக்களை முகாம்களில் இருத்துவதாகப் படைத்தரப்பு கூறிவருகிறது.

படைத்தரப்பினால் கூறப்படும் பாதுகாப்பு என்பது காரைநகரின் நில அமைப்பியலில் தாராளமாக உண்டு.

எனவே விசாலமான நிலப்பரப்பு, தங்குவதற்கான வீட்டு வசதிகள், சேவைகளை மேற்கொள்வதற்கான அரச திணைக்களங்கள், மருத்துவமனைகள், பாடசாலைகள், ஆலயங்கள் எனப் பன்முக வசதிகளைக் கொண்ட காரைநகரில் வன்னியில் இருந்துவரும் மக்களைக் குடியமர்த்துவதன் மூலம், அந்த மக்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்கும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குமான வாய்ப்புகள் கிடைக்கும்.

ஆகவே இதுபற்றி படைத்தரப்பும், அரச உயர் அதிகாரிகளும் சாதகமாகப் பரிசீலனை செய்வது நன்மை பயப்பதாக அமையும்.

அதேநேரம் வன்னியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள மக்களை அவர்களின் உறவினர்கள் சந்திப்பதற்கும், நலன்புரி நிலையங்களில் பிரிந்துள்ள ஒரே குடும்ப அங்கத்தவர்களை ஒன்று சேர்ப்பதற்குமான பணிகள் தீவிரப்படுத்தப்படுவது அவசர, அவசிய தேவையாகும்.

## இலங்கைப் பிரச்சினை தொடர்பில் முதல்வர் கருணாநிதி பதவியை ராஜினாமா செய்திருந்தால் மதிப்பு உயர்ந்திருக்கும்

### கவிஞர் தாமரை தெரிவிப்பு

(சென்னை)

இலங்கை பிரச்சினையை பொறுத்தவரை ஜெயலலிதா அமாவாசை என்றால் கருணாநிதி அமாவாசைக்கு மறுநாள் என்று திரைப்பட பாடலாசிரியர் தாமரை கூறியுள்ளார். இதனால் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக சென்னையில் திரையுலகத்தினர் நடத்திய தொடர் முழக்கப் போராட்டத்தில் நேற்று முன்தினம் பரபரப்பு ஏற்பட்டது.

திரைப்படப் பாடலாசிரியர் தாமரை பேசும் போது,

கலைஞர்கள் எந்த கட்சி ஆட்சி வந்தாலும் ஆளுங்கட்சிக்கு ஆதரவான நிலையையே எடுக்கின்றனர். நான் அப்படியில்லை ; எதையும் வெளிப்படையாக பேசுவேன். தமிழ் ஒரு இனம் ; மலையாளி ஒரு இனம். இந்தியன் எப்படி ஒரு இனமாகும்? இதைக் கேட்டால் இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசுகிறேன் என்கின்றனர். சின்னதாகக் கூட உணர்வுகளை வெளிப்படுத்த முடியவில்லை.

இலங்கை பிரச்சினை பற்றி பேசும் போது, ஜெயலலிதா எதிர்க்கட்சியில் இருப்பதால் எப்படி வேண்டுமென்றாலும் பேசலாம். ஆட்சியிலிருப்பவர்கள் அப்படி பேச முடியாது என்று கருணாநிதி கூறுகிறார். இலங்கை பிரச்சினையில் இங்குள்ள மக்கள் நம்மால் எதுவும் முடியவில்லையே என்று சொல்லலாம் ; முதல்வராக இருக்கும் கருணாநிதி என்னால் முடியாது என்று சொல்லலாமா? பதவியை ராஜினாமா செய்துவிட்டு மத்திய அரசிற்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தால் உங்கள் மதிப்பு மக்கள் மனதில் உயர்ந்திருக்கும்.

ஈழப் பிரச்சினையை பொறுத்தவரை ஜெயலலிதா அமாவாசை என்றால் கருணாநிதி அமாவாசைக்கு மறுநாள். இவ்வாறு தாமரை பேசிக்கொண்டிருந்த போது இயக்குநர் பாரதிராஜா எழுந்து சென்று பேச்சை முடித்துக்கொள்ளும்படி கூறினார்.

அதற்கு தாமரை நான் இன்னும் பேச வேண்டியிருக்கிறது என்றார். அங்கு கூடியிருந்தவர்கள் தாமரையை பேச விடுங்கள் என கூச்சலிட்டனர். அதன் பின்னர் தாமரை சில வற்றை பேசிவிட்டு சோனியா தான் எல்லாவற்றுக்கும் சூத்திரதாரி எனக் கூறி இருக்கையில் அமர்ந்தார்.

இதில் கவிஞர் புலமைப்பித்தன் பேசும் போது, ஒரு ராஜிவ் உயிருக்கு இன்னும் எத்தனை லட்சம் ஈழத் தமிழர்கள் இரையாக வேண்டும்? புறத்தே வெளுத்து அகத்தே கறுத்துள்ள சோனியாவே சொல்லிவிடுங்கள் என்றார். (ஓ-6)

## இலங்கை பிரச்சினையில் கலைஞர் அமைதி காக்கக் கூடாது

### இந்திய கம்யூனிஸ்ட் பொதுச்செயலர் பரதன் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் மிகக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். நம் கண் முன்பாகவே அங்கு இனப்படுகொலை நடக்கிறது. எனவே முதல்வர் கருணாநிதி இனியும் அமைதி காக்காமல் செயல்பட வேண்டும், ஏதாவது செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் ஏ.பி.பரதன் வலியுறுத்தியுள்ளார்.

பெங்களூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் ஐக்கிய முற்போக்குக்கூட்டணி அரசும், தி.மு.கவும், தமிழர்களைக் காக்கவோ, அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவோ எதுவும் செய்யவில்லை. அமைதியாக இருந்து வருகின்றன.

அமெரிக்காவுடன் அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுவதற்குத் தான் முக்கியத்துவம் தருகிறார் மன்மோகன் சிங். இலங்கை அரசுடனும், விடுதலைப் புலிகளுடன் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி சுமூக முடிவை எட்டியிருந்தால் அது மிகப் பெரிய சாதனையாக மாறியிருக்கும்.

இலங்கையில் தமிழர்களுக்கு என்ன வெல்லாம் நடக்கிறதோ அதெல்லாம் நமது நாட்டில் உள்ள தமிழர்களையும் கடுமையாகப் பாதிக்கும்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் தி.மு.க. முக்கிய கட்சியாக உள்ளது. இருந்தாலும், தமிழர்கள் மறுவாழ்வுக்கோ, அவர்களது துயரங்களைத் தீர்ப்பதற்கோ அது எதுவுமே செய்யவில்லை. இவர்களுக்கெல்லாம் மக்கள் தேர்தலில் சரியான பாடம் கற்பிப்பார்கள்.

வேலைநிறுத்தம் நடத்துவதால் எந்த பலனும் இல்லை என்பதை கருணாநிதி உணர வேண்டும். அதற்குப் பதிலாக அப்பாவித் தமிழர்களைக் கொல்வதை தடுத்து நிறுத்த வேண்டும். அமைதியான முறையில், அரசியல் ரீதியிலான தீர்வு காணப்பட வேண்டும். இது சாதாரண பிரச்சினை இல்லை என்றார். (ஓ-6)

## — பாரிய மனிதாபிமான நெருக்கடி — உடன் உதவ அனைவரிடமும் வேண்டுகோள்

(கொழும்பு)

வன்னி பாதுகாப்பு வலயங்களிலிருந்து வெளியேறி வந்திருக்கும் சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்களைப் பராமரித்து அவர்களது உடனடித் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் அரசாங்கமும் உதவி அமைப்புக்களும் திண்டாடி வருகின்றன.

இவர்கள் அனைவரும் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, புளியங்குளம், ஓமந்தைப் பகுதிகளிலுள்ள தற்காலிக முகாம்களில் மிகவும் நெருக்கமாகத் தங்க வைக்கப்பட்டிருப்பதாக உதவி அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

“மிகக் குறுகிய காலத்தில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு வந்துள்ளனர். இந்தளவு தொகையான மக்களுக்கு உதவ அரசாங்கமும் உதவி அமைப்புக்களும் மிகவும் சிரமப்படுகின்றன என்று இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவிப்பொருள் சேகரிப்பை ஒருங்கிணைக்கும் அமைச்சர் டலஸ் அழகப்பெருமா தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு வேண்டிய உதவிப் பொருட்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ள அவர், முக்கியமாக போத்தலில் அடைக்கப்பட்ட நீர், உணவு, உடைகள், மருந்துப் பொருட்கள் என்பன அவசரமாகத் தேவைப்படுவதாகக் கூறியுள்ளார்.

குடிநீர், உடனடித் தயாரிப்பு உணவு வகைகள், மருந்துகள் அவசரமாகத் தேவைப்படுகின்றன என்று அமைச்சர் அழகப்பெருமா தெரிவித்தார்.

இதேவேளை, இந்த மக்கள் இடம்பெயர்ந்து வந்திருக்கும் பகுதிகளுக்கு அருகாமையிலிருக்கும் வைத்தியசாலைகளுக்குத் தேவையானளவு வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் அனுப்பப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இதுவரையில் 300 வைத்தியர்கள், 200 பயிற்சி வைத்தியர்கள், 550 தாதியர் மற்றும் இரண்டு நடமாடும் மருத்துவப் பிரிவுகளை அனுப்பி வைத்துள்ளோம். எனினும், இன்னும் எமக்கு அதிகளவு மருத்துவர்கள், மருந்துப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் தேவைப்படுகின்றன என்றார். (ஓ-6)

## சுவாமி விவேகானந்தரின் வீர முரசு தொண்டு



கொடுங்கோல் மன்னர்களே! கொடுங்கோன்மை ஒரு பக்கமானால் அடிமைத்தனம் மற்றொரு பக்கம் என்பதை நீங்கள் அறியவில்லை. அந்தோ! அடிமையும் கொடுங்கோன்மையும் ஒரே பொருள் கொண்ட சொல்களே.

கொள்ளை நோயோ பஞ்சமோ வந்து மக்கள் துயருறும் இடங்களில் எல்லாம், நீங்கள் அனைவரும் சென்று, அவர்களின் துன்பங்களைத் தணியுங்கள். மிஞ்சினால் அம்முயற்சியில் இறக்கலாம். அதனால் என்ன? உங்களைப் போல எத்தனைபேர் புழுக்களைப் போல் தினமும் பிறக்கவும், இறக்கவும் செய்கின்றனர்? பரந்த உலகிற்கு அதனால் ஆவதென்ன? இறப்பதோ நிச்சயம். அதனால் இறப்பிற்கும் ஒரு பெரிய குறிக்கோளைக் கொள்க. வாழ்க்கையில் ஒரு பெரும் குறிக்கோளைக் கொண்டு இறப்பது மிக நல்லது. வாசல் தோறும் இக்குறிக்கோளைப் பரப்புங்கள். அதனால் நீங்கள் நன்மை அடைவதோடு, நாட்டுக்கும் நன்மை செய்வீர்கள். நமது நாட்டின் பிற்கால நம்பிக்கைகள் உங்களையே பொறுத்துள்ளன.

# மலேரியா நோயினைத் தொடர்ந்தும் கட்டுப்பாட்டினுள் வைத்திருப்போம்

இரண்டாவது உலக மலேரியா தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

உலகளாவிய ரீதியில் மக்கள் மத்தியில் மலேரியா நோய் தொடர்பில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் இத்தினம் அனுஷ்டிக்கப்படும் வேளையில் யாழ்ப்பாணத்தில் மலேரியா நோய் நிலை பற்றி அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

யாழ்ப்பாணத்தின் மலேரியா நோய் நிலமை அண்மைக் காலமாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை யாழ்ப்பாணத்தில் மலேரியா நோய்க்கட்டுப்பாட்டிற்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி என்ற வகையில் அறியத் தருவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இதனைக் கடந்த சில ஆண்டுகளில் இலங்கை மற்றும் யாழப்பாணத்தில் மலேரியா நோயின் தாக்கம் தொடர்பான விபரங்களுடன் கீழே தரப்பட்டுள்ள புள்ளிவிபர அட்டவணையிலிருந்து விளங்கிக் கொள்ள முடியும்.

| ஆண்டு | யாழ்ப்பாணம் | இலங்கை |
|---|---|---|
| 1998 | 47802 | 211691 |
| 1999 | 32915 | 264549 |
| 2000 | 7242 | 210039 |
| 2001 | 1365 | 66522 |
| 2002 | 1829 | 41411 |
| 2003 | 413 | 10510 |
| 2004 | 45 | 3709 |
| 2005 | 22 | 1670 |
| 2006 | 02 | 590 |
| 2007 | 00 | 198 |
| 2008 | 04 | 670 |

கடந்த ஆண்டுகளில் பலருடைய ஒத்துழைப்போடு குறிப்பாக மலேரியா தடை இயக்கப் பணிப்பாளர், மலேரியா தடை இயக்கப் பணிப்பாளர் பணிமனையைச் சார்ந்த உத்தியோகத்தர்கள், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையைச் சார்ந்த உத்தியோகத்தர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் அத்துடன் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் மலேரியா தடைப்பகுதி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனை வரதும் அயராத முயற்சியினாலும் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், பொதுமக்களின் ஒத்துழைப்பினாலும் இந்த நிலைமையை அடைய முடிந்துள்ளது.

இதற்கு அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மலேரியா நோயினைத் தொடர்ந்தும் கட்டுப்பாட்டினுள் வைத்துக் கொள் வதற்கு அனைவரும் தமது பொறுப்பினையுணர்ந்து செயற்படவேண்டியது அவசிய மாகும்.

அத்துடன் மலேரியா நோய் தொடர்பில் அனைவரும் விழிப்புணர்வுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் செயற்படும் போது எமது மாவட்டத்தை மட்டுமன்றி எமது மாகாணத்தை மற்றும் ஒட்டுமொத்த இலங்கையையும் மலேரியா அற்ற பிரதேசமாக மாற்ற அனைவரும் ஒன்றிணைவோம்.

## இன்று ஏப்பிரல் 25 ஆம் திகதி உலக மலேரியா தினம்

**வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம்.**
பிராந்திய மலேரியாத் தடை இயக்க வைத்திய அதிகாரி,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.


COURSE LENGTH -SIX MONTH
ஆறு மாத கால டிப்ளோமா
தபால் மூலம்
Apr.2009-Sep.2009

1. DIP.IN.PSYCHOLOGY (உளவியல் டிப்ளோமா)
2. DIP.IN.OFFICE ADMINISTRATION (காரியாலய நிர்வாக டிப்ளோமா)
3. DIP.IN.CIVIL ENGINEERING (சிவில் என்ஜினியரிங் டிப்ளோமா)
4. DIP.IN.NURSING ADMINISTRATION
5. DIP.IN.HUMAN RESOURCES MANAGEMENT (மனித வள முகாமைத்துவ டிப்ளோமா)
6. DIP.IN.EDUCATIONAL MANAGEMENT (கல்வி முகாமைத்துவ டிப்ளோமா)
7. DIP.IN.BUSINESS MANAGEMENT (வியாபார முகாமைத்துவ டிப்ளோமா)
8. DIP.IN.HEALTH & HOSPITAL MANAGEMENT
9. DIP.IN.BANKING MANAGEMENT
10. DIP.IN.RESEARCH & DEVELOPMENT

பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்:
கல்முனை, மட்டக்களப்பு,திருகோணமலை, கிண்ணியா,மூதூர், புத்தளம்,
வவுனியா,மன்னார்,யாழ்ப்பாணம்,கண்டி,கொழும்பு,பதுளை,
நுவரேலியா,ஹட்டன், அனுராதபுரம்.

◆ மேலதிக விபரங்களுக்கு :
COUNTRY CO-ORDINATOR
MARUTHUR.A.HASSEN
(B.Sc.Psychology, M.Sc.Psychology)
◆ யாழ்ப்பாண தொடர்பு மையம்
S.N.Piratheepan
T.P-077-6702505

(2534)

17 வருட கால அனுபவம்

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES

24,1st Floor,Super Market Complex Main Street, Sainthamaruthu-07
Web: WWW.AIIMAS.COM,WWW.IIMAT.COM,WWW.AICOMAS.ORG
Tel: 060 267 1749, 060 267 9688, 067 222 2917, 071 803 4848

விண்ணப்பம் முடிவு திகதி : 10-05-2009


# மக்கள் மண்சாப்பிட நேரிட்டாலும் போர் நிறுத்தப்பட மாட்டாது

## பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவிப்பு

மக்கள் மண்சாப்பிடநேரிட்டாலும் விடுதலைப்புலிகளுடனான போர் நிறுத்தப்பட் மாட்டாதென பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார். சர்வதேச சமூகத்தின் ஒட்டுமொத்த உதவிகளும் நிறுத்தப்பட்டால் கூட போர்நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வன்னியில் முன்னெடுக்கப்பட்டுள்ள மனிதாபிமான மீட்புப் பணிகள் எந்தக் காரணத்திற்காகவும் கைவிடப்படமாட்டதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் ஹிலாரி கிளின்ரன் உள்ளிட்ட சர்வதேச முக்கியஸ்தர்கள் பிரபாகரனை மீட்க முயற்சி மேற்கொண்டு வருவதாகவும் நல்ல மனிதர்கள் யார் ? பாவிகள் யார் ? என்பதனை உலகம்விரைவில் உணர்ந்து கொள்ளும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர் மக்களை பாதுகாப்பது குறித்து சமூகம் அக்கறைகாட்டவில்லை எனத் தெரிவித்துள்ள அவர் பிரபாகரனை பாதுகாப்பதற்கு அதிகளவு முனைப்புக் காட்டி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# யுத்தப் பிரதேசத்தில் சிக்கியுள்ள பொதுமக்களை பாதுகாக்க வெளிநாட்டு படகுகள் அவசியமில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

வன்னி யுத்த பிரதேசத்தில் சிக்கியுள்ள பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு பிரான்ஸ் மற்றும் பிரித்தானியாவின் படகுகள் அவசியப்படாதென அரசாங்கம் அறிவித்துள்ளது. பொதுமக்களைப் பாதுகாக்கும் நோக்கில் பிரான்ஸூம் பிரித்தானியாவும் இணைந்து இலங்கைக்கு யுத்தப் படகுகளை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அரசாங்கத்தின் அனுமதியின்றி குறித்த படகுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

யுத்த சூனிய பிரதேசத்தில் சிக்கியுள்ள பொதுமக்களை பாதுகாப்பாக மீட்பதற்கு தேவையான சகல திறமையும் இலங்கை கடற்படையினரிடம் காணப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. (ஓ-6)


தந்தை செல்வநாயகம்
32 ஆவது நினைவுநாள்
அஞ்சலி நிகழ்ச்சி





காலம்: 26.04.2009 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 9.30 மணி
இடம்: தந்தை செல்வா நினைவிடம்
தந்தை செல்வா சதுக்கம்
யாழ்ப்பாணம்.
தலைவர்: அருட்கலாநிதி சு.ஜெபநேசன்
(தலைவர். தந்தை செல்வா அறங்காவலர் குழு)

சர்வமத பிரார்த்தனை

வரவேற்புரை : பேராசிரியர் ச.சத்தியசீலன் அவர்கள்
(பீடாதிபதி பட்டப்படிப்புகள் பீடம்)
அஞ்சலியுரை
◆ மௌலவி முகமட் பாஹிர் அவர்கள்
◆ வணபிதா எம்.வி.இ.இரவிச்சந்திரன் அவர்கள்
◆ ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
நன்றி: திரு.பொ.கனகசபாபதி
(தந்தை செல்வா அறங்காவலர் குழு உறுப்பினர்)

அஞ்சலி நிகழ்வில் கலந்து
தந்தை அவர்களை நினைந்து
அமைதி காண்போம் வாரீர்.

(2551)

யாழ்ப்பாணம்
23.04.2009

தந்தை செல்வா
நினைவு அறங்காவலர் குழு



# புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களான தயா மாஸ்டர், ஜோர்ஜ்க்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களான தயா மாஸ்டர் மற்றும் ஜோர்ஜ் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. தயா மாஸ்டர் விடுதலைப்புலிகளின் ஊடகப் பேச்சாளராகவும் ஜோர்ஜ் மொழி பெயர்ப்பாளராகவும் கடமையாற்றியதாக புலனாய்வுத் துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்தல், படுகொலைச் சம்பவங்களை மூடி மறைத்தல், ஜனநாயக ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்திற்கு எதிராக செயற்படல், விடுதலைப் புலி பிரதிநிதிகளாக செயற்படல், ஊடகங்களில் பொய்யான பிரச்சாரங்களை மேற் கொள்ளல் போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டு வழக்குத் தொட ரப்படலாம் எனத் தெரிவிக்கப் படுகிறது.ஆஇவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் பல்வேறு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக திவயின சுட்டிகாட்டியுள்ளது. (ஓ-6)

# பொப்ரா அரைச்சதம் விளாசல் பஞ்சாப் அணி முதல் வெற்றி



(டர்பன்)

பொப்ராவின் அதிரடி அரைச் சதத்தின் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பில் எட்டு அணிகள் மோதும் இரண்டாவது இருபது-20 தொடர் தென்னாபிரிக் காவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று டர்பனில் நடைபெற்ற லீக் சுற்றின் 11ஆவது போட்டியில் பீற்றர்சன் தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் யுவராஜ் சிங் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி கலிஸின் சிறப்பான அரைச்சதத்தின் மூலம் 20 ஓவர்களில் 9 விக் கெட்டுகளையிழந்து 168 ஓட்டங்களை குவித் தது.

இதில் ஜக்கலிஸ் 46 பந்து களில் ( 5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 62 ஓட்டங்களையும் ரோஸ் டெய்லர் 22 பந்துக ளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 35 ஓட்டங்களையும் ரைடர் 21 பந்துகளில் (6பவுண்டரிகள் உட்பட) 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் அப்துல்லா 4 ஓவர் கள் பந்து வீசி 31 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுகளையும் இர்பான் பதான் 3 விக் கெட்டுகளையும் மற்றும் சாவ்லா, வி.ஆர்.வி சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 169 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி பொப்ராவின் அதிரடியான அரைச்சதத்தின் மூலம் 19 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 173 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் பொப்ரா 59 பந்துகளில் (4 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் உட்பட) 84 ஓட்டங்களையும் அணித் தலைவர் யுவராஜ் சிங் ஆட்டமிழக்காமல்17 பந்துகளில் (3 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட) 30 ஓட்டங்களையும் சங்கக்கார 26, கோல் 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஜக்கலிஸ் ,கும்ளே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் கிங்ஸ் லெவின்பஞ்சாப்அணிதனது மூன்றாவது போட்டியில் முதலாவது வெற்றியை பதிவு செய்ததுடன் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி தனது 4 வது போட்டியில் 3ஆவது தோல்வியை சந்தித்தது.

ஆட்ட நாயகனாக கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியின் பொப்ரா தெரிவானார்.

(5)

# ஐ.பி.எல். தொடரிலிருந்து அன்ரூ பிளின்டொப் விலகல்

(டர்பன்)

முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக ஐ.பி.எல். தொடரிலிருந்து பிளின்டொப் விலகினார்.

இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் அன்ரூ பிளின்டொப் ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாடி வருகிறார்.

இவர் முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக சத்திர சிகிச்சை மேற்கொள்ள உள்ளார்.

இதனால் பிளின்டொப் ஐ.பி.எல். தொடரில் விளையாட மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து திரும்பும் அவர் சத்திர சிகிச்சை முடிந்த பின்பு 3 முதல் 5 வாரம் வரை ஓய்வு எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.



இந்திய அணியின் நட்சத்திர கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் டர்பனில் தனது 36வது பிறந்தநாளை கொண்டாடினார்.

# டெக்கான் சார்ஜர்ஸ் முதல்வன்

ஐ.பி.எல். இரண்டாவது இருபது-20 தொடரில் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணி முதலாவது இடத்தில் உள்ளது.புள்ளிகள் அடிப்படையில் அணிகளின் வரிசை வருமாறு;

| அணியினர் | போட்டிகள் | வெற்றி | தோல்வி | சமநிலை | புள்ளிகள் | சராசரி ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| டெக்கான் சார்ஜர்ஸ் | 2 | 2 | 0 | 0 | 4 | +2.158 |
| டில்லி டேர்டேவில்ஸ் | 2 | 2 | 0 | 0 | 4 | +0.985 |
| மும்பை இந்தியன்ஸ் | 2 | 1 | 0 | 0 | 3 | +0.950 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 3 | 0 | 1 | 1 | 3 | -1.875 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 3 | 1 | 2 | 0 | 2 | +1.067 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 3 | 1 | 2 | 0 | 2 | -0.364 |
| பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் | 4 | 1 | 3 | 0 | 2 | -0.669 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 3 | 1 | 1 | 1 | 2 | -0.887 |

# மூன்றாவது சுற்றுக்கு நடால் முன்னேற்றம்



பார்ஸிலோனா ஓபன் டென்னிஸ் போட்டி யின் மூன்றாவது சுற்றில் விளையாட உலகின் முதல் நிலை வீரர் ரபேல் நடால் தகுதி பெற்றார். ஸ்பெயினின் நடால் இரண்டாவது சுற்றுப் போட்டியில் போர்த்துக்கல்லின் பிரடொரிகோவை 6:2,6:2 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம்நடால் இந்த பருவகாலத்தில் மட்டும் 30 போட்டிகளில் வென்றுள்ளார். மூன்று போட்டிகளில் மாத்திரமே தோல்வியை சந்தித்துள்ளார்.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 68



## உலகக் கிண்ண வெற்றி அணியில் முரளிதரன்



உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் முதன் முதலாக இறுதிப் போட்டிக்கு முன்னேறிய இலங்கை அணி பலம் வாய்ந்த அவுஸ்திரேலிய் அணியுடன் கோப்பைக்காக மோதியது.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியை பழி வாங்க வேண்டும் என்ற கொள்கையுடன் தனது முதலாவது உலகக் கிண்ண தொடரில் விளையாடிய முரளிதரன் களமிறங்கினார்.

1996ஆம் ஆண்டு மார்ச் 17ஆம் திகதி லாகூர் கடாபி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஆரம்பத்தில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர்களின் பந்துவீச்சுக்களை விளாசி ஓட்டங்களைக் குவித்தது.

எனினும் முரளிதரனின் துல்லியமான சுழலுக்கு ஓட்டங்களை எடுக்கத் தடுமாறிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 241 ஓட்டங்களை எடுத்தது.


பாலா

இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி 31 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து ஷேன்வோர்னை (02) வெளியேற்றி ஒரு விக்கெட்டை வீழ்த்தி அசத்தினார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 46.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களைமாத்திம் இழந்து 245 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்று சம்பியனானது.

இதன் மூலம் 5ஆவது உலகக்கிண்ண தொடரில் இலங்கை அணி முதல்முதலாக கிண்ணத்தைகைப் பற்றியது.

இவ் அணியில் முரளிதரன் இடம் பெற்றதுடன் தன் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டை சுமத்திய அவுஸ்திரேலிய அணிக்கு பதிலடி கொடுத்தார். (பயணிக்கும்)

# எண் விளையாட்டு-66



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப் பட்டுள்ள எ ண்ணுக்கு சம மாகவர வேண்டும். இடமிருந்து வலமாக செல் லும் கட்டங்களுக்கும் இதே விதிதான்.

அக்கட்டங் களுக்கான கூட்டுத் தொகை இடப்புறம் கொடுக்கப் பட்டுள்ளது.1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும்.ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்தியஎண்திரும்பவரக் கூடாது.

# அரசு உணவையும் மருந்தையும் ஆயுதமாகப் பயன்படுத்துகிறது

## விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வன்னியிலுள்ள பொதுமக்களுக்கான மனிதாபிமான உதவிகளை திட்டமிட்ட முறையில் மட்டுப்படுத்தியும் தாமதப்படுத்தியும் தடுத்தும் வருவதாக குற்றம் சாட்டியிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை, இது ஒரு கடுமையான போர்க் குற்றம் எனவும் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குற்றம் சாட்டியிருக்கிறது.

விடுதலைப் புலிகள் வெளியிட்ட அறிக்கை என புதினம் இணையத்தளத்தில் வெளியான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்னியில் உள்ள மக்களை மனிதாபிமான உதவிகள் சென்றடைய வேண்டுமென்ற கோரிக்கையை அரசிடம் முன்வைப்பதற்கு அனைத்துலக சமூகம் தவறிவிட்டது ஏன் என்ற கேள்வியையும் எழுப்பியிருக்கும் விடுதலைப் புலிகள், பட்டினி போடுதலை தமிழர்களுக்கு எதிரான ஓர் போராயுதமான அரசாங்கம் பயன்படுத்துவதாகவும் இது ஜெனீவா உடன்படிக்கையை மீறும் ஒரு செயற்பாடு எனவும் தெரிவித்திருக்கிறது.

இதேவேளை சில நாட்களுக்கு முன்னர் வன்னியைச் சென்றடைந்திருக்க வேண்டிய மனிதாபிமான உதவிகளை தாங்கிய கப்பலை அரசாங்கம் தடுத்துள்ளது. அதிகாரிகளின் அனுமதிக்காக இந்தக் கப்பல் காத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

(ஏ-1)

## வன்னியில் எறிகணைத்...

முதல் அகோர எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது.

அதிகளவில் குண்டுகள் மக்கள் மத்தியில் வீழ்ந்து வெடித்தன. வலைஞர்மட மாதா கோவில் பகுதிகளிலேயே எறிகணைகள் செறி வாக வீழ்ந்து வெடித்துள்ளன.

காயமடைந்தவர்களில் 228 பேரை மாத்திரமே வலைஞர் மடத்திலிருந்து உடனடியாக முள்ளிவாய்க்கால் மருத்துவமனைக்கு கொண்டு வர முடிந்தது என தெரிவிக்கப்பட்டது.

அகோரமான தாக்குதலை தொடர்ந்து முள்ளிவாய்க்கால், வட்டுவாகல் பகுதிகளை நோக்கி வலைஞர்மடம் பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். உண்ண உணவின்றி- குடிக்க குடி நீர் இன்றி உரிய ஆடைகள் இன்றி அவதிப்படும் மக்கள் கடும் வெயிலுக்கும் மத்தியிலும் மீண்டும் மீண்டும் இடம்பெயர்ந்து வருவதாக கூறப்பட்டது.

இதேவேளையில் கடற்படையினர் நேற்று கடலில் இருந்து கரையை நோக்கி பீரங்கித் தாக்குதலை நடத்தியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன. மாலை 6 மணி தொடக்கம் முள்ளிவாய்க்கால், மக்கள் குடியிருப்புகள் மீது செறிவான பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இத் தாக்குதல்களில் 12 பேர் காயமடைந்துள்ளனர். மக்களின் நான்கு வீடுகள் அழிந்தும் சேதமாகியுள்ளன.

இதேவேளை நேற்றுக் காலை 9.10 மணிக்கும் பின்னர் 10.20 மணிக்கும் வான் படையின் விமானங்கள் வட்டுவாகல் பகுதியில் மக்கள் வாழ்விடங்கள் மீது குண்டுத் தாக்குதலை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டது.

(ச-5)

## வித்தியா...

அழைத்து செல்லப்பட்டார். இவர் இனம் தெரியாதவர்களினால் கடத்தப்பட்டதாக முன்னர் தகவல் வெளியான போதும் சுமார் 2 மணி நேரத்தின் பின்னர் இவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

கொழும்பில் விமானத்தாக்குதல் நடைபெற்ற நேரத்தில் இவர் மேற்கொண்டிருந்த தொலைபேசி உரையாடல்கள் தொடர்பாக சந்தேகம் வெளியிட்டே வித்தியாதரன் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில் வித்தியாதரன் மீதான குற்றச் சாட்டுக்களை நிரூபிப்பதற்கு போதியளவு சாட்சியங்கள் இல்லை என்று கூறி அவரை விடுவிக்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (ச-5)

## பாதுகாப்பு வலயப்...

ஐ.நாவின் மனிதாபிமானப் பணியாளர்களின் குழு ஒன்றை அனுப்பி வைக்கப் போவதாக அறிவித்திருந்தார்.

இது தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் விவகார அமைச்சர், கொழும்பில் பணி புரியும் ஐ.நா அலுவலர்கள் இங்கு செல்வதற்கான அனுமதியை வழங்க அரசாங்கம் கொள்கையளவில் இணங்கியிருப்பதாக தெரிவித்தார்.

கொழும்பை தளமாகக் கொண்ட ஐ.நா. அலுவலர்கள் இங்கு செல்வ தற்கான நடைமுறை ஏற்பாடுகள் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ள போதிலும் அந்தப் பகுதியில் போர் நடைபெற்றுக் கொண்டிருப்பது இதனைச் சாத்தியமற்றதாக்கி விடலாம் எனவும் சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்பு வலயத்துக்கு செல்லவிருக்கும் குழுவில் யார் இடம் பெறுவார்கள், எவ்வளவு காலத்துக்கு அவர்கள் தங்கியிருக்க திட்டமிட்டுள்ளார்கள். அங்கு அவர்கள் எவ்வாறான பணியை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்கள் என்பன போன்ற விடயங்களை முதலில் எமக்கு தெரிவிக்க வேண்டும் எனத் தெரிவித்த அமைச்சர் மகிந்த சமரசிங்க, அதன் பின்னரே அதற்கான இறுதி அனுமதி எம்மால் வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை மோதல் பகுதியிலிருந்து வெளியேறும் பொதுமக்களுக்கு எவ்வித உதவியும் தேவைப்பட வில்லை. அவர்கள் தாமாகவே வெளியேறுவதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கோஹன கூறுகின்றார். மோதல் பகுதியிலிருந்து மக்கள் வெளியேறும் இடங்களுக்கு ஐ.நாவின் பணியாளர்கள் செல்ல அனுமதிக்க வேண்டும் என ஐ.நா. கோரியிருப்பது தொடர்பாக கருத்து வெளியிட்ட போதே அவ்வாறு அவர் சர்வதேச ஊடக மொன்றுக்கு தெரிவித்திருக்கின்றார்.

(ச-5,14)

## இடம்பெயர்ந்...

அமைத்தல் மற்றும் தங்குமிட வசதிகளை வழங்குதல் என்பவற்றுக்கு பொறுப்பாகவும், பொலநறுவை மாவட்ட அரசாங்க அதிபர் டீ.ஏ.லால் விமல் உணவு, சுகாதாரம் மற் றும் பொது வசதிகள் என்பவற்றுக்கும், அநுராதபுர மாவட்ட அரசாங்க அதிபர் எச்.எம் கே ஹேரத் நீர் விநியோகம், மின்சாரம் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் என்பவற்றுக்கும் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# மேல் மாகாண சபைக்கான தேர்தல் இன்று இடம்பெறும்

மேல் மாகாண சபைக்கான தேர்தல் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள நிலையில், வாக்குப் பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்படும் நடவடிக்கை நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமானதாகக் குறிப்பிட்டிருக்கும் தேர்தல்கள்திணைக்களம் தேர்தல் கடமைகளில் ஈடுபடவிருக்கும் அரசாங்க ஊழியர்கள் அந்தந்த தேர்தல் நிலையங்களுக்கு சென்றிருப்பதாகவும் கூறியுள்ளது.

மேல் மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு 2 ஆயிரத்து 769 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருப்பதுடன் 319 நிலையங்களில் வாக்குகளை எண்ணும் பணிகள் நடைபெறும் எனவும் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்தது.

மேல் மாகாண சபைக்கு கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களிலிருந்து 102 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவிருப்பதுடன் இந்தத் தேர்தலில் 2 ஆயிரத்து 378 வேட்பாளர்கள் போட்டியிடுவதாகவும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டது.

இதேவேளை, இந்தமுறைத் தேர்தலிலும் 2 கண்காணிப்பு குழுக்களுக்கு மாத்திரமே வாக்களிப்பு நிலையங்களுக்கு பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்தது. (ச-5)

# புதுமாத்தளன் பகுதிக்கு ஊடகவியலாளர் பயணம்

விடுதலைப் புலிகள் வசம் இருந்து இலங்கை படையினர் கடைசியாக கைப்பற்றியிருந்த புதுமாத்தளன் பகுதிக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களை முதல் முறையாக இலங்கை இராணுவம் அழைத்துச் சென்றிருக்கிறது.

கொழும்பிலிருந்து புதுமாத்தளன் சென்றிருந்த ஊடகவியலாளர் குழுவில் இடம் பெற்றிருந்த பி.பி.சி. செய்தியாளர் சற்று தொலைவில் விடுதலைப் புலிகள் வசம் எஞ்சியுள்ள பிரதேசத்திலிருந்து வெடிச் சத்தத்தைக் கேட்கக்கூடியதாகவும் புகை கிளம்புவதை பார்க்கக் கூடியதாகவும்இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்ற பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான சிவிலியன்கள் தொடர்ந்து வெளியேறி வருவதை காணக்கூடியதாக இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, பரந்தன் சந்தியிலிருந்து முல்லைத்தீவு செல்லுவரையில் வீதியின் இரு பகுதிகளும் மோதல்கள் இடம்பெற்றதற்கான சான்றுகள் தெரிகின்றன. கட்டிடங்கள் சிதைந்திருக்கின்றன. தென்னை மரங்கள் உட்பட மரங்கள் எல்லாம் முறிவடைந்து காணப்படுகின்றன. யுத்தத்தால் நாசமடைந்த பிரதேசங்கள் என்று சொல்லக் கூடிய அளவிற்கு அந்த பிரதேசங்கள் காட்சியளிக்கின்றன என்று அவர் தெரிவித்தார்.

(ச-5,14)

## 3 மாதங்...

விஜயம் செய்திருந்தார்.

அவர் இலங்கையில் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையிலேயே இத்தகவல் வெளியானதாகவும் உறுதிப்படுத்தாத செய்திகள் தெரிவித்தன.

மூன்று மாதங்களில் 6 ஆயிரத்து 500 பொதுமக்கள் உயிரிழந்ததுடன் சுமார் 14 ஆயிரம்பேர் படுகாயமடைந்த தகவல் விஜய் நம்பியாரின் அறிக்கையில் இருந்தமையாலேயே ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் விளக்கமளிக்க அவர் மறுப்புத் தெரிவித்ததாகவும் கூறப்பட்டது.

எனினும் அத்தகவலை வெளியிடாமல் இரகசியமாக வைத்திருந்து இலங்கை அரசுடன் பேசி போர் நிறுத்தத்தை ஏற்படுத்த ஐ.நா. முயன்றதாகவும் தகவல் தெரியவருகிறது.

இத்தகவலின் அடிப்படையிலேயே இந்திய உயர்மட்டக்குழுவினர் இலங்கை வருவதற்கு காரணமாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5,14)

## இன்று கப்பல்...

பெற்றுக் கொண்டவர்களும் அவசர தேவையின் நிமிர்த்தம் செல்ல இருப்பவர்களும் இன்று காலை 9 மணிக்கு யாழ். புகையிரத நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு அரசாங்க அதி பர் அறிவித்துள்ளார். (ச)

## உடனடிப் போர் நிறுத்தத்...

இந்திய வெளியுறவு செயலாளர் சிவ்சங்கர் மேனன் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் ஆகியோர் நேற்று முற்பகல் 11.30 மணி அளவில் இலங்கையை வந்தடைந்தனர்.

இலங்கையில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்தும் வலியுறுத்தலை விடுக்கும் வகையிலேயே இந்த விஜயம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. தமிழகத்தின் அழுத்தங்களை அடுத்து கடந்த இரண்டு நாட்களாக பிரதமர் மன்மோகன் சிங்கின் தலைமையில் கூடிய இந்திய முக்கிய அமைச்சர்கள் மேற்கொண்ட முடிபை அடுத்தே இந்த விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய விசேட வானூர்தியில் கட்டுநாயக்கவை வந்தடைந்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளியுறவுத்துறை செயலாளர் சிவ்சங்கர் மேனன் ஆகியோர்இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை நேற்று சந்தித்து பேசினர்.

சிறப்பு விமானம் மூலம் கொழும்பு வந்த இருவரும் ஜனாதிபதியின் இல்லத்திற்கு ஹெலி கொப்டரில் சென்றனர்.

ஜனாதிபதியின் இல்லத்தில் சுமார் 90 நிமிடங்கள் நடைபெற்ற சந்திப்பின் போது. இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என இருவரும் வலியுறுத்தியதாக தெரிகிறது. எனினும் இது நட்பு ரீதியான சந்திப்புத்தான் .

இலங்கையில் தற்போது நிலவும் சூழ்நிலை குறித்து அவர்கள் விவாதித்தனர் என இலங்கை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்திய தரப்பில் இந்த சந்திப்பு குறித்து உடனடியாக கருத்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஜனாதிபதி ராஜபக்ஷவுடனான சந்திப்பு முடிந்தவுடன் இருவரும் உடனடியாக இந்தியா திரும்பினர்.

இதேவேளை எந்தக் காரணத்திற்காகவும் போர் நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட மாட்டாதென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, ஐக்கிய நாடுகள், அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா உள்ளிட்ட உலக நாடுகள் போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு தொடர் அழுத்தத்தை செலுத்திவரும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்ட போராட்டம் எந்த அழுத்தங்களுக்காகவும் இடைநிறுத்தப்பட மாட்டாது என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)


**Brown & Co.Ltd**

**வாடிக்கையாளர்களுக்கு**

**ஓர் இடமாற்ற அறிவித்தல்**

எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு இதுவரை காலமும் 89, ஸ்ரான்லி வீதி, யாழ். என்னும் முகவரியில் இயங்கி வந்த எமது கிளை காட்சியறை 20.04.2009 தொடக்கம் 62/16, ஸ்ரான்லி வீதி, (C.S.P. கொமர்ஷல் வங்கி அருகாமையில்) யாழ். என்னும் முகவரியில் இடமாற்றம் பெற்று இயங்கி வருகின்றது என்பதை அன்புடன் அறியத்தருகிறோம்.

*அனைவரினதும் அன்பான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம். நன்றி*

தொடர்புகளுக்கு: 0212224040

-முகாமையாளர்.

(இ)

**இடம் மாற்றம்**

சகல விதமான றேடியோக்கள், கசற் றெக்கோடர்கள், வோக்மன்கள், கார் றேடியோக்கள், கலர்,கறுப்பு வெள்ளை TV க்கள், டெக்குகள், CD, DVD பிளேயர்கள், டிஸ் அன்ரனாக்கள், பூஸ்ரர்கள், அன்ரனாக்கள், வயர்கள், வூவர்கள், வவல்கள், அம்பிளிபயர்கள், மைக்குகள், ஸ்ராண்டுகள், ஸ்கிறீன் வயர்கள், ஓடியோ, வீடியோ கசற்டுகள், கசியோ, சிற்றிசன், சிக்கோ கை, சுவர் மணிக்கூடுகள், மணிக்கூட்டு பற்றிகள் ஆகியவற்றை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாட வேண்டிய ஒரே இடம்

**நியூ சிற்றி றேடர்ஸ்** T.P. 021 222 3226

319 A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

*குறிப்பு; யாழ் நகரில் இந்த ஸ்தாபனத்துக்கு கிளைகள் இல்லை.*

(C-2417)

**Organ/ Violin Notes**

Organ, வயலின், Guitar, புல்லாங்குழல், வீணை போன்ற இசைக் கருவிகளுக்கான 300 சினிமாப் பாடல்களின் Notes விற்பனைக்குண்டு. Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள் தினமும் மாலை 4 மணியிலிருந்து நடைபெறுகின்றன.

S.S.Rajeinthiran

75, கோவில் வீதி, நல்லூர்.

T.P. : 071 3055991

(2530)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.04.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.